$1.50

# ரோஜா





சிறப்பாசிரியர் 'தமிழருவி' சந்திரமோகன்

மலர்.3 இதழ்.14 ஜூலை ஆகஸ்ட் 15, 1996

நவாலி வெளியைத் தாண்டிவிட்டுப்
பலாலி தொலைவில் என்று எண்ணி
நல்லருள் நல்கும் தேவாலயத்தை
நாடிச் சென்று களைதீர்த்தீர் - ஐயோ!
வானம் பிளக்கும் வெடியுடனே
வந்து போட்டது "புக்காரா" - அதில்
காலம் முடிந்து கரைந்தனவே - இரத்தக்
களரியாய் இருநூறு தமிழுயிர்கள்....

வீ. எஸ். நேசானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரடைஸ் அச்சகம்


உங்களுக்குத் தேவையான
அனைத்து அச்சடிப்புத்
தேவைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

குறைந்த விலை
நிறைந்த தரம்

## Paradise Print Plus

1231 Ellesmere Rd., Unit. 201
Scarborough, ON
Tel: 416-288-6449
Fax: 416-288-0595


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உள்ளே...


- வீடுகளைத் தொலைத்துவிட்ட....
  (அரசியல்) - 03
- நவீன ஓவியம் - 06
- உன் நாட்டுப்பற்றுக்கு...
  (கவிதை) - 07
- இலக்கிய உறவுகள்
  (கட்டுரை) - 09
- 'விடுதலைத் தென்றல்' - 14
- தகவல்காரர் (குறுநாவல்) - 15
- தனிமை (கவிதை) - 18
- என் பேனாவின் பிரசவங்கள் - 19
- தொழில் நுட்பம் - 23
- வர்த்தகம் - 25
- மனம்விட்டு - 27
- ஆசிரியர் பேனா - 28
- வாசகர் பேனா - 29
- சிறப்பாசிரியர் பக்கம் - 32
- காலம் ஒருநாள் மாறும்
  (சிறுகதை) - 33
- ஈந்தேன் இங்கே (கவிதை) - 39
- காதலும் கவர்ச்சியும் - 41
- பயமெனும் பறவைக்கூட்டில்
  (கவிதை) - 45
- 'விளம்பரம்' - 46
- சிறுவனாக 'கலைஞர்' - 47
- கராத்தே - 49
- நாமமது... (கவிதை) - 51
- சினிமா - 52
- எழுத்தாளர் அரும்பு - 54
- INDEPENDENCE DAY - 56
- விளையாட்டு - 58




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்** (ஐயாமணி)
(புங்குடுதீவு - 10)

**(416) 2 6 6 3 3 3 3**



**(416) 2 6 6 3 3 3 3**

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும், திருமணம் போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகட்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ இடங்களில் மண்டப வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

கல்யாண மண்டபம், மணவறை, பந்தல் அலங்காரம், பூமாலை, ஆண்டாள் மாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைக்குரிய பொருட்கள் இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

628 E Birchmount Road, Scarborough, ON. M1K 1P9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளைத் தொலைத்துவிட்ட தமிழர்கள்

பென்சிலைத் தொலைத்திருக்கின்றோம்! பேனாவைத் தொலைத்திருக்கின்றோம்! ரேசரைத் தொலைத்திருக்கின்றோம்! பாடசாலை நாட்களிலும், மற்றும் வேலைத் தலங்களிலும் எத்தனை எத்தனை சிறு பொருட்களை எல்லாம் நாம் தொலைத்திருப்போம்.

தொலைந்த பொருட்களை எண்ணி கவலைப்பட்டிருப்போம். மனம் வருந்தியிருப்போம்.

எனக்கு இன்றும் ஞாபகத்தில் உள்ளது. நான் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சமயம் எனது கைக்கடிகாரத்தைத் தொலைத்து விட்டேன். மிகமிக வருந்தினேன். வீட்டுக்கு வந்து அம்மாவுக்குக் கூறியபோது அம்மாவும் வருந்தினா. சகோதரர்களும் வருந்தினார்கள்.

ஒரு கைக்கடிகாரத்தைத் தொலைத்ததற்கே எமது குடும்பம் வருந்தியது.

ஒரு வீட்டையே தொலைத்து விட்டால்.... கிணற்றையே தொலைத்துவிட்டால்......

எனது நெருங்கிய நண்பன் அவன்! அவனுக்குத் தமிழீழத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. அக்கடிதம் வந்ததிலிருந்து அவன் அழுகின்றான். ஏன் ஏன் என்று கேட்டதற்கும் பதில் இல்லாமல் அவன் அழுகின்றான். அவனது தாயாரும் அழுது அழுது கண்கள் வீங்கிப்போயிருந்தன!

மீண்டும் அவனை அணுகி என்ன நடந்தது என்று கேட்டேன்.

அவன் ஒரு கடிதத்தை எடுத்து என்முன் வீசுகின்றான்!

அவன் சகோதரன் தமிழீழத்தில் இருந்து எழுதியது அக்கடிதம்!

படிக்கின்றேன்.....

என்றும் அன்பு நிறைந்த அம்மா, தம்பி மற்றும் யாவருக்கும் அன்புடன் எழுதிக் கொள்வது....
நாங்கள் யாவரும் இதுவரை நலமே உள்ளோம். அதுபோல் உங்கள் சுகத்திற்கும் இறைவன் துணைபுரிவாராக.

நாங்கள் ஏப்ரல் 24ம் திகதி யாழ்ப்பாணம் வந்து குடியேறக்கூடிய நிலை ஏற்பட்டதால் சாவகச்சேரியில் இருந்து வந்துவிட்டோம். சூரியகதிர் - II இராணுவ நடவடிக்கை மூலம் வலிகாமப் பகுதிகளுக்கு மக்கள் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டரை லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் திரும்பியுள்ளார்கள். தற்பொழுது இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்கின்றோம். சிவில் நிர்வாகம் படிப்படியாக வழமைக்குத் திரும்புகின்றது. எமது உறவினர்கள் பலரும் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்கள். நீங்கள் நான் சாவகச்சேரியில் இருந்தபோது அனுப்பிய பணம் கிடைத்தது.

## தமிழருவி சந்திரமோகன்

30/10/95 முதல் மக்கள் எவ்வளவு விரைவாக வெளியேறினார்களோ அதேபோல் 21/04/96 முதல் விரைவாக சொந்த இடங்களுக்கு திரும்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

தம்பி... அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின் போது மிக மிக மனவருத்தமான நிலை ஒன்று எமக்கு ஏற்பட்டுள்ளது. நாம் எதிர்பார்க்காத ஒன்று. அதாவது உங்கள் வீடு முற்றாக அழிந்துவிட்டது. எமது இரண்டு வீடுகளும், கிணறும் காணாமல் போய்விட்டன. பாதிக்கப்பட்ட பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளில் எங்கள் வீடுகளும் அடங்கு கின்றன. எங்கள் எல்லோ ருக்கும் மிகவும் கவலை, நீங்கள் கவலைப்பட வேண்டாம், எங்கள் யாவரினதும் பலன் அப்படியாகி விட்டது.



நண்பன் ஏன் வேதனையால் வெதும்புகின்றான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் வீடுகளில் எண்பது விழுக்காடு ஸ்ரீலங்கா இராணுவத்தின் குண்டு மழையிலும் செல்தாக்குதலிலும் உடைந்து போய்விட்டதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கொஞ்ச நாட்களுக்கு முன் அறிவித்திருந்தார். எஞ்சிய இருபது விழுக்காடு வீடுகள் சுத்தமாக வழித்து எடுக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் கடிதங்கள் தெரிவிக்கின்றன.

பலர் தங்களது வீடுகள் இருந்த இடத்தை அடையாளம் காணமுடியாது தவிக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவம் ஆயிரக்கணக்கான வீடுகளை புல்டோசர்களை உபயோகித்து தரைமட்டமாக்கி அந்த இடத்தில் வீதிகளை உருவாக்கி விட்டதாக இந்திரஜித் கூறுகின்றார்.

யாழ்ப்பாணம் திரும்பிய மக்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு செல்ல வழியில்லாமல் தவிக்கின்றார்கள். நடுவழியில் விடப்பட்டுள்ளார்கள்.

ஒரு வீட்டைக் கட்டுவதற்கு எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருப்பார்கள். வீடு கட்டி முடிந்ததும் எவ்வளவு குதூகலம் கொண்டிருப்பார்கள். இன்று வீடு தரைமட்டம் என்னும்போது அவர்கள் எவ்வளவு கொடூரமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பார்கள்.

இன்று யாழ்ப்பாணம் யுத்தத்தில் பாழடைந்த நடாகவே காட்சி தருகின்றது.

பேய் வீடு போலவே காட்சி தருகின்றது. யாழ்ப்பாணம் நூல்நிலையம், சினிமா கொட்டகைகள், வீரசிங்கம் மண்டபம், யாழ்மாநகரசபைக் கட்டிடம், யாழ். புகையிரத நிலையம், யாழ் நவீன மார்க்கட், கம்பீரமாக மாநகர மத்தியில் அழகு காட்டி நின்ற சிலைகள் எல்லாமே தரைமட்டம்!

என்ன பழி செய்தது யாழ்ப்பாணம்!

தற்போது மிச்சம், சொச்சமாக இருந்த வீடுகளும் அழிவுகளுக்குள்ளாகியிருக்கின்றது.

தமிழர்களுக்கு வீடுகள் என்றால் உயிர்! வீடுகள் போனது அவர்கள் உயிர் பறிக்கப்பட்டதற்குச் சமம்.

காலகாலமாக இலங்கையில் ஏற்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனக்கலவரங்களால் கோடிக்கணக்கான சொத்துக்களைத் தமிழர்கள் பறிகொடுத்துள்ளார்கள். அவர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டன! தொழில் நிலையங்கள் சூறையாடப்பட்டன! கொழுத்தப்பட்டன! தென்னிலங்கையில் எமது மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் கொஞ்சமா?

வடக்கு மகாணத்தில் மட்டுமல்ல கிழக்கு மாகாணத்திலும் எம் சகோதரர்கள் படும் துன்பம் சொல்லுந்தரமற்றது.

'புனர்நிர்மானம்.... புனர்நிர்மானம்......' என்று அறைகூவல் விடுக்கின்றது ஸ்ரீலங்கா அரசு. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர்நிர்மானம் செய்வதில் மிகவும் அக்கறை காட்டுவதாக வெளிநாடுகளுக்கு நாடகமாடுகின்றது ஸ்ரீலங்கா அரசு.

யாழ்ப்பாணத்தின் அழிவுக்கு ஸ்ரீலங்கா அரசே பொறுப்பென்பது இந்த வெளிநாட்டு அரசுகளுக்கு தெரியாத இரகசியமல்ல!

புனர்நிர்மானம் என்ற போர்வையில் வெளிநாடுகளிலிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசு முயல்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் அழிவுகளைக் காட்டி அதன் புனர்நிர்மானத்திற்கென ஸ்ரீலங்கா அரசு வெளிநாட்டு அரசுகளிடம் பிச்சை கேட்பது கையில் நிறையும் பணத்தைக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கெதிரான போரை முன்னெடுப்பதற்கான தந்திரமாகும்.

புனர்நிர்மானத்திற்கு சுமுகமான சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். மக்களின் அடிப்படை சுதந்திரங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். சர்வாதிகார வாழ்வு மாற்றப்பட வேண்டும்.

இன்று மக்கள் குடாநாட்டில் சிறைவைக்கப்பட்டுள்ளார்கள் என்றே கூறலாம். சுதந்திரமில்லாத பாவிகளாக அல்லலுறுகின்றனர்! இவர்களுக்கு விடிவுகாலம்தான் எப்போது?

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் முன்னர் புனர்நிர்மானம் செய்வதென்பது அர்த்தமற்றது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென இலங்கை அரசு விரும்பினால், விடுதலைப்புலிகளுடன் பேச முன்வரவேண்டும்.

விடுதலைப்புலிகளின் சம்மதம் இல்லாத தீர்வுத்திட்டங்கள் தோல்வியிலேயே முடியும் என்பது உண்மை.

அரசு இதை உணராமலில்லை. உணர்ந்திருந்தும் அரசின் ஆணவம், அகம்பாவம், விட்டுக்கொடுக்காத தன்மைகள் சமாதான முயற்சிகளைத் தோற்கடிக்கின்றது.

ஈழத்தமிழ் மக்கள் இப்போது விரும்புவது அமைதியை!

அவர்கள் நிம்மதியான நித்திரை கொண்டு எத்தனை வருடங்களாகின்றன?

அவர்களுக்கு வேண்டும் நிம்மதியான நித்திரை! அதுவும் அவர்களது சொந்த வீடுகளில்! இன்று அவர்களது வீடுகளும் அழிந்து விட்டன.

தமிழர்கள் இன்று களைத்து விட்டார்கள். இனியும் அவர்களால் துன்பச் சுமைகளை சுமக்க முடியாது.

அவர்களை நிம்மதியாக வாழவிடுங்கள்!

சுதந்திரமாக இயங்க விடுங்கள்?

*****

எல். கிரிஷோத் ரைப்செட்டிங்
(416) 425-2884



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் நாட்டுப்பற்றுக்கு என் நன்றியம்மா

குகப்பிரியா

ஓ.... கனடா!
நொந்து வந்தவர்களின்
நோய்தீர்க்கும் மருந்து நீ!
எப்படி நீ;
நூற்றி இருபத்தொன்பது வயதிலும்
நேற்றுப் பிறந்த குழந்தைபோல்
இளமையாய் இருக்கிறாய்?....
இந்தச் சின்னப் பிஞ்சின் கையில்
சிரிக்கின்ற உனது கொடி
எத்தனை செய்திகளை எடுத்தியம்புகிறது!
இவளது முன்னோர்கள்;
எந்த நாட்டிலிருந்து இங்கு வந்து சேர்ந்தனரோ?
வந்து சேர்ந்த அனைவரையும்
வாரிவாரி அணைக்கும் உன்னை
என்ன பெயரில் நான் அழைக்க?...
உன் வீட்டில்
நூற்றுக்கும் அதிகமான
மொழிபேசும் குழந்தைகளைப்
போற்றி வளர்க்கிறாயே!
அதனைப் போற்றத்தான் வேண்டுமம்மா!
இந்தச் சின்னச் சிறுமிக்குள்ள
நாட்டுப்பற்றில் ஒருபங்கு
எந்தனது நாட்டினிலே இல்லையம்மா?....
அங்கே
இரண்டு இனமிருந்தே எத்தனை அவதி!
எங்கள் அரசியல்வாதிகளோ
இனவெறியையும், மதவெறியையும்
எரியச் செய்தனரேயன்றி
தேசப்பற்று என்றால் என்ன வென்று
தெரிவிக்காமலேயே போயினர்
அந்தத் தேசத்தின் காற்றினிலே
தேகத்தை வளர்த்தவன் நான்
நாட்டுப்பற்றை மறந்து
நாட்டைவிட்டு வந்துவிட்டேன்!
என்றாலும்;
என்றாவது ஓர் நாளில்
என்கால்கள் பதியுமங்கு!
கனடியக் கொடிக்குக்
கௌரவம் செய்யும் சின்னவளே!
உன்நாட்டுப்பற்றுக்கு என் நன்றியம்மா!
கனடிய மகளே!
உன்மீது கால் பதித்தவரை யெல்லாம்
காத்து வருபவளே!
வெள்ளைச் சேலைமீது கறுப்புக் கறையாக
உன்மீது கூட ஒரு உறுத்தலுண்டு...!
பூர்வீகக் குடிகளான
உன் சொந்தப் புதல்வர்களின்
தார்மீக உரிமைகளைத் தடுக்கிறாயாமே!
அது ஏன்?....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வி. கந்தவனம் அவர்களின்

# இலக்கிய உறவுகள்

## எஸ். பொன்னுத்துரை

அவர் மேற்கு, நான் கிழக்கு. அவர் கதை, நான் கவிதை. அவர் தீ, நான் தண்ணீர். அவர் தன் போக்கு, நான் என் போக்கு. அவர் மாக்ஸியவாதி, நான் தமிழரசுவாதி.

இருப்பினும், இந்த இரண்டும் ஒரு பாயில் படுத்தும் ஒன்றாக உண்டும் உறவாடின. அடிக்கடி இலக்கியச் சிவனின் அடிமுடி தேடி அடிபிடிப் பட்டன. ஒரு கூரையின் கீழ் பாடபுத்தகச் சபையில் பணியும் புரிந்தன. அந்தக் காலங்கள் பெரும் உற்பத்திக் காலங்கள். நினைக்க நினைக்க, அறிவை முந்திக்கொண்டு அன்பு கண்களை நனைக்கின்றது. அன்புக்கு இல்லை அடைக்குந்தாழ்.

இலக்கியத்தின் உயிர்நாடியே அன்புதான். அன்பு இன்றி வாழ்க்கையு மில்லை, வாழும் இலக்கியமு மில்லை. எல்லோர்க்கும் விளங்கக் கூடிய இந்தச் சின்ன விடயம் புறக்கணிக்கப்பட்டு, கொள்கைப் பூசல்கள் ஈழத்து இலக்கிய உலகத்தைக் குழப்பிக் கொண்டிருந்த காலத்தில், ஓர் உன்னத இலக்கிய நெஞ்சத்துடன் நான் உறவு வைத்துக் கொண்டது என்னைச் சார்ந்தவர்களுக்குப் பிடிக்க வில்லை.

மாத்தளையில் ஒரு இலக்கியக் கருத்தரங்கில் நான் பொன்னுத்துரையின் கதை ஒன்றைப் புதுத் தமிழின் பொலிவுக்கு உதாரணம் காட்டப்போய் உதை வாங்காத குறை. கேள்விக்கு மேல் கேள்விகள். அதற்கு முந்திய ஆண்டு நடைபெற்ற ஒரு விழாவிலே ஓர் இடதுசாரி அன்பர் பாரதியைக் கம்பனோடு ஒப்பிட்டுப் பாரதியைப் போன்ற புலவனைத் தமிழ் உலகம் இதுவரை கண்டதில்லை என்று முடித்தார். அடுத்துப் பேசிய நான் அவருக்கு பதில் சொல்ல வேண்டிய தாயிற்று. அந்தப் பேச்சிலிருந்து நான் கம்யூனிசத்துக்கு எதிரானவன் என்ற கருத்தை வளர்த்துக் கொண்ட சிலர் இப்பொழுது ஏன் கம்யூனிச எழுத்தாளர் பொன்னுத்துரைக்குப் புகழாரம் சூட்டுகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அவர்கள் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களாக இருத்தல் வேண்டும்.அப்பொழுது சத்தியாக்கிரகக் காற்று வீசிக் கொண்டிருந்த காலம். கம்யூனிசக் காரருக்குத் தமிழ் உணர்ச்சி இல்லை என்பது தமிழரசுவாதிகளின் பொதுவான கருத்து.

மற்றொருபுறம் இடதுசாரிக் கொள்கையுள்ளவர் என்று நான் நினைத்துக் கொண்டிருந்த அன்பர் ஒருவரும் பொன்னுத்துரைக்கு மாறான கருத்தைத் தெரிவித்தார். அதற்குக் காரணம் அதற்கு முந்திய ஆண்டு (1961) கொழும்பு சகிராக் கல்லூரியில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய மகாநாடு. அந்த மகாநாட்டிலிருந்து பொன்னுத்துரையும் அவரது ஆதரவாளர்களும் கருத்து வேறுபாடுகொண்டு வெளியேறியது பல கம்யூனிசவாதிகளுக்குப் பிடிக்காத சங்கதி.

இத்தனைக்கும் நான் அப்பொழுது பொன்னுத்துரையுடன் அதிக நெருக்கமும் இல்லை. இருந்தும் அவரது இரசிகன் என்ற முறையில் அவரை ஆதரிக்க வேண்டியது எனது கடமையாயிற்று. நான் அப்பொழுது சொன்ன விளக்கங்கள் சிலவற்றை நினைத்துப் பார்க்கின்றேன்.

முதலாவது என்னைப் பற்றியது. நான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வயதிலிருந்தே கட்டுப்பாட்டுச் சுதந்திரத்துடன் வளர்க்கப்பட்டவன். சில கட்சிகள் என்னைக் கட்டி வைத்துச் சூடு மிதிக்கப் பார்த்தன. நான் அகப்பட்டுக் கொள்ளவில்லை. சூடு மிதிக்கும் தொழில் கூடாது என்பதற்காக வல்ல; சூடு மிதிக்கும் மாடுகளுக்குச் சுதந்திரம் குறைவு என்பதற்காக. அதற்காக இந்த மாடு அந்த மாடுகளுக்கு எதிரானது என்று வாதிடுவது தகாது.

இன்னுமோர் உதாரணம். ஒருவனுக்கு எத்தனையோ பெண்களைப் பேசலாம்,கல்யாணத்துக்கு. கடைசியில் அவன் ஒரு பெண்ணையே தெரிவு செய்வான். அத்தெரிவைக் கொண்டு, பேசப்பட்ட மற்றைய பெண்ணுக்கு அவன் எதிரானவன் என்று வாதிடுவது பின்புத்தியின் பேடித்தனம். மேலும், தன்னைத் திருமணம் செய்யவில்லை என்பதற்காக எந்தப் பெண்ணும் அவனுடைய குடும்ப வாழ்வைக் குலைக்கச் சதிசெய்வதும் பொதுவழக்கில்லை. நான் நியாயமான பொதுவழக்கைப் போற்றுகின்றவன்.

இரண்டாவது, பொன்னுத்துரையைப் பற்றியது. நான் விரும்பியது கம்யூனிசப் பொன்னுத்துரையை அல்ல. ஈழத்துச் சிறுகதை மன்னர் எஸ். பொ. வை. அவரது இலக்கியத்தை, சொல் அழகை, சுவை அழகை. அடுத்தவன் வீட்டுப் பசுவின் பாலில் சத்தில்லை என்று சத்தம் போட்டுக் கத்தி நேரத்தை நான் என்றும் வீணடிப்பதில்லை. அதுவும் அந்தப் பசுவின் பாலைக் குடித்துச் சுவைத்தபின் அது நல்லாயிருக்கிறது என்று சொல்லும் நேர்மைத்திறன் என்னிடத்தில் இல்லையெனின் என்னை ஓர் இலக்கியகாரன் என்று பறைசாற்றுவதில் அர்த்தமே இல்லை.

நீர்கொழும்பில் ஒரு கூட்டத்தில் எஸ். பொ. வின் தலைமையில் பேச நேர்ந்தது. அப்பொழுது அவரை ஒரு பழுத்த மரம் எனக் குறிப்பிட்டிருந்தேன். பழுத்த மரத்துக்குக் கல்லெறிகள் அதிகம். கல்லெறிகள் அவரை நன்கு வளர்த்தெடுத்தன என்றே சொல்ல






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரோஜா' மாத சஞ்சிகையின்
மூன்றாவதாண்டின் நிறைவையொட்டி....

# ரோஜாவின் பூ மாலைப்பொழுது

ஆகஸ்ட் 10ம் திகதி, சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு

2723 St. Clair Ave. East (at O'Conner)இல் அமைந்துள்ள St. Colomba Anglican தேவாலய 'பரீஸ்' மண்டபத்தில் நடைபெறவுள்ள 'ரோஜா' சஞ்சிகையின் மூன்றாவதாண்டு நிறைவு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேரத்துக்கு ஆரம்பமாகும்.

- 'ரோஜா' ஆண்டு மலர் வெளியீடு
  ('விடுதலை முரசு' முழக்கம் - 2 வது இதழும் வெளியிடப்படும்)
- நிலா குகதாசனின் 'இன்னொருநாளில் உயிர்ப்பேன்' கவிதைத் தொகுதி வெளியீடு
- கலை நிகழ்ச்சிகள்:
  - நடனங்கள்:
    - நிர்த்தியா நாட்டிய மன்ற மாணவிகள்
    - சிலம்பொலி ஷேத்திர மாணவிகள்
    - நாட்டிய ஷேஸ்திராலய மாணவிகள்
  - நவராஜகுலம் முத்துக்குமாரசாமி அவர்களின் மாணவி அருட்செல்வி அமிர்தானந்தர் வழங்கும் மெல்லிசை விருந்து
  - 'கலைச்செல்வன்' உலகநாதன் வழங்கும் காட்சியும் கானமும்
  - கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் '6 முகம்' கதை நிகழ்ச்சி

நிகழ்ச்சிகள் யாவும் 10 மணியளவில் நிறைவுபெறும்.

**உங்கள் ஆதரவுக்கு எமது இதய நன்றிகள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஏனெனில் கல்லால் எறிந்தவர்களுக் கெல்லாம் அவர் எறிந்தவை கனிகள்

உண்மையில், இந்தக் கல்லெறிகள் சகிராக் கல்லூரி மகாநாட்டுக்குப் பின்னரே விழத் தொடங்கின. மகாநாட்டிலிருந்து எஸ். பொ. வெளியேறியபின் அவர் வலது சாரியாகிவிட்டார் எனப் பல கம்யூனிசவாதிகள் கருதினர். அவருடன் நெருங்கிப் பழகியதிலிருந்து அவர் கம்யூனிசக் கொள்கையில் இருந்து அணுவும் விலகவில்லை என்பதனை உணரக்கூடியதாக இருந்தது. சந்தர்ப்பவாதிகளுக்கு இந்த உண்மை அப்பொழுது விளங்கவில்லை.

இலக்கியததுக்கு கட்சி இல்லை என்பது என்னுடைய கருத்து. அரசியல் கொள்கை இலக்கிய உறவைப் பாதித்தலாகாது. பொன்னுத்துரை அவர்களும் கட்சிக் கண் கொண்டு தனது இலக்கிய நண்பர்களுடன் பழகவில்லை. எம்.ஏ. ரஹ்மான், இரசிகமணி கனக செந்திநாதன், F.X.C. நடராசா போன்ற அவரது நெருங்கிய நண்பர்கள் எல்லோரும் வெவ்வேறு அரசியல் களங்களில் நின்றவர்கள். தமிழை வளர்க்க ஒன்றாக இயங்கியவர்கள். ஒற்றுமைப் பண்புக்கு உதாரணம் காட்டியவர்கள்.

எஸ். பொ. வும் நானும் புரிந்த வாதங்கள் கணக்கிலடங்கா. இவை மேடை விவாதங்கள் அல்ல; உள்வீட்டு விவாதங்கள். ஒவ்வொரு சந்திப்பும் ஏதாவதொரு விவாதத்தில் முடிவது வழக்கம். சில விடயங்களும் முடிவுகளும் பின்வருமாறு:

(1) மரபு

நான்: வேரின்றி மரமில்லை. மரபின்றி இலக்கியம் இல்லை.
எஸ். பொ.: மரபு "is the still point of the turning wheel".

(2) பாலியல்

நான்: பாலியல் பற்றி வெளிப்படையாகப் பேசுவது தமிழ் மரபல்ல.
எஸ். பொ.: அது எஸ். பொ. வின் மரபு. எஸ். பொ. ஒரு தமிழன். எனவே பாலியல் பற்றி வெளிப்படையாகப் பேசுவது தமிழ் மரபாகும். நீ logic படிச்சனியல்லே.

(3) முற்போக்கு

நான்: முற்போக்கு என்பதன் எதிர்ச்சொல் என்ன?
எஸ். பொ.: நற்போக்கு.
நான்: அப்படி என்றால் முற்போக்குக் கெட்ட போக்கா?
எஸ். பொ.: முற்போக்கில் குறையொன்றும் இல்லை. முற்போக்கு எழுத்தாளர் சங்கந்தான் கெட்டுப்போய்விட்டது. அதன் பிற்போக்குத் தனத்தைக் கண்டுகொண்ட அன்றே நான் வெளியேறிவிட்டேன்.

(4) சிறுகதை

நான்: சிறுகதை என்றால் என்ன?
எஸ். பொ: என்னைப் பற்றி உனக்கு நல்லாய் தெரியுமல்லே.

(5) பிரச்சனை

நான்: நீ ஒரு பிரச்சனைக்குரிய எழுத்தாளன் என்று சில எழுத்தாளர்கள் சொல்கிறார்களே?
எஸ். பொ: எலிகளுக்குப் பூனை பிரச்சனையாகத்தான் இருக்கும். இந்தப் பூனையைக் கண்டு புலிகளே பயப்படும் போது எலிகள் எம்மாத்திரம்? பிரச்சனையைக் கண்டு பயப்படு கின்றவனோ பயந்து ஓடுகின்றவனோ நானல்லன். என் பேனாவைக் கண்டு எவன் பயப்படுகிறானோ அவன் பேனாவுக்கு வலுவில்லை என்று அர்த்தம். ஒன்றைக் கண்டு அது வேறொன்று என்று மயங்குகின்றவன் மக்களையும் குழப்புவான். அத்தகையவன் எழுத்தாளனாக இருக்கத் தகுதியற்றவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சந்திப்புகளிற் பெரும்பாலானவை கொழும்பில் எம். ஏ. ரஹ்மான் அவர்களின் 'அரசு வெளியீடு' அலுவலகத்தில் நடைபெறும். இரசிகமணி கனக. செந்திநாதன் இல்லத்திலும் எஸ். பொ. வின் யாழ்ப்பாணத்து வீட்டிலும் எனது வீட்டிலும்கூடச் சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

எஸ். பொ. வில் நான் கண்ட சிறந்த குணம் மாற்றானையும் மதிக்கும் குணம். கொள்கை முரண்பாடுகள், அவரிடத்தில் இயல்பாகவே அமைந்த மனிதாபிமானத்தையோ அவர் கடைப்பிடித்த சத்தியத்தையோ பாழ்படுத்தவில்லை. நிதானம் தவறாத நேர்மை அவரது முற்போக்குக் கொள்கையை வழிப்படுத்தும் காந்தக்கருவியாக இருந்தது. அவரது கண்டனங்கள் கொள்கைரீதியானவை; தனிப்பட்ட பகைமை உணர்ச்சி அற்றவை; குறிவைக்கப் பட்டோரின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைக்காதவை. திறமை உள்ளவனை ஒதுக்கித்தள்ள வேண்டும் என்று அவர் திட்டமிட்டது கிடையாது. அவரது மனச் சுத்தத்தை நான் நன்கு அறிவேன். மனச் சுத்தத்தை நான் நன்கு அறிவேன். மனச் சுத்தம் உள்ள ஒருவரை எளிதில் எடைபோட்டுவிடலாம். அல்லாதவரை அளவிடல் அரிது.

எஸ். பொ வுக்குப் பிடித்தமான கவிஞர்கள் மூவர். அவர்களுள் இருவர் மஹாகவியும் அண்ணலும். இவர்களின் கவிதைகளையும் எனது கவிதைகளையும் பல கூட்டங்களில் விமர்சனம் செய்திருக்கின்றார். ஒருமுறை நயினாதீவில் நடந்த விழா ஒன்றில் எனது கவியரங்கப் பணிபற்றி - பாணிபற்றி வெகுவாகப் பாராட்டிப் பேசிய பேச்சு இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. மஹாகவியின் 'குறும்பா' என்ற புதுமைப படைப்புக்கும் எனது 'கவியரங்கில் கந்தவனம்' என்ற தொகுப்புக்கும் அவர் எழுதிய முன்னுரைகள் வெறும் முகமன் உரைகள் அல்ல. பல்கலைக்கழக அறிஞர்களையே பக்கங்கள் புரட்டவைக்கும் அஃகி அகன்ற ஆய்வுரைகள்.

எஸ். பொ. மலையையொத்த உறுதி படைத்த மனிதர். எனினும் தனது வீட்டில் ஒருநாள் என்னை அவர் கலங்கிய கண்களுடன் வரவேற்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எந்த மலையையும் தாய் தந்தையர் பிரிவு உலுப்பிவிடும். 1972 ஜனவரியில் எஸ். பொ. வின் அருமைத் தந்தையார் அமரராகிவிட்ட தினம் அவர் கலங்கி அழுத நாள். உற்ற நண்பன் கலங்கியதைக் கண்டு பற்றி எரிந்த எனது உணர்ச்சியைக் கண்களால் அடைக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்து அர்த்தமற்ற சடங்குகளையும் போலிச் சம்பிரதாயங்களையும் கேலிசெய்யும் நண்பன் தனது தந்தையின் பொருட்டு அவற்றைத் தழுவி நின்ற கோலத்தைக் காண எனக்கு மேலும் அழுகை வந்தது.

எஸ். பொ. வின் 'அப்பையா' காவியம் தமிழுக்குப் புதியது. சாட்டுக்குக் கல்வெட்டு ஒன்றைப் பாடுவித்து நினைப்பொழியும் சம்பிரதாயத்துக்கு மாறுபட்டது. தந்தை மீது மகனே உருகிப் பாடிய காவியம். உண்மை அன்புப் பெட்டகம். மகன் தந்தைக்கு ஆற்றிய உதவி. அப்பையா என்னோற்றான்கொல்?

'அப்பையா' காவியத்து முன்னீட்டில் எஸ். பொ. இப்படி எழுதுகின்றார்; 'எழுத்துலகிலே சாதனைகள் நிலைநாட்டுதல் வேண்டும் என்பதிலே நான் பேராசைக்காரன்'.

பலரது ஆசை கைகூடுவதில்லை. எஸ். பொ. வின் ஆசை - பேராசை ஈழத்து இக்கால இலக்கியத் துறையைப் பெருமைப்படுத்தும் அளவுக்கு நிறைவேறியிருக்கின்றது.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதிக்காக

## ரோஜா, தமிழர் தகவல்

## ஈழநாடு, செந்தாமரை, நம்நாடு, உதயன், உலகம்

ஆகிய ஏழு வெளியீடுகளினதும் ஒன்றிணைப்பில்

சங்கீதபூஷணம், இன்னிசை இளவரசர்

# பொன். சுபாஷ் சந்திரன்

தமிழீழத்து இளங்கலைஞர்களுடன் சேர்ந்து வழங்கிய

# "விடுதலைத் தென்றல்"



ரொறன்ரோவில் வெளியாகும் ஈழநாடு, செந்தாமரை, நம்நாடு, உதயன், உலகம் ஆகிய ஐந்து வாரப் பத்திரிகைகளும் தமிழர் தகவல், ரோஜா ஆகிய இரு மாத சஞ்சிகைகளும் இணைந்து, தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதிக்காக ஜூலை 20ம் திகதி சனிக்கிழமை, ரொறன்ரோ Central Technical Collegeஇல் 'விடுதலைத் தென்றல்' என்னும் நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

'விடுதலைத் தென்றல்' கனடாவில் முதன் முதலாக நடத்தப்பெற்ற முழுமையான விடுதலைப் பாடல் நிகழ்ச்சியென்ற சிறப்பைப் பெற்றுள்ளது. இந்த நிகழ்ச்சியில் பாடப்பட்ட முப்பது பாடல்களும் முத்தானவை. சங்கீத பூஷணம் பொன். சுபாஷ் சந்திரன், பொன். சுந்தரலிங்கத்தின் புதல்வி, புதல்வன் செந்தூரன், மையூரன், நந்தினி, நாவலன் மற்றும் அனைத்துக் கலைஞர்கள், 'வானம்பாடிகள்' இசைக்குழுவினரும் இணைந்து விடுதலையை விரும்பி நிற்கும் உள்ளங்களை உணர்ச்சி வெள்ளத்தில் மிதக்கவைத்தனர். நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய பல்கலைகளில் பண்டிதரான ஞானபண்டிதன் தன் பணியைப் பாராட்டும் வகையில் செய்திருந்தார். முல்லைத்தீவு முகாமை தாக்கி அழித்த வெற்றியை விடுதலைப் புலிகள் அறிவித்துக் கொண்டிருந்த போது 'விடுதலைத் தென்றல்' நிகழ்ச்சி நடைபெற்றது பொருத்தமானது என 'ஈழநாடு' குறிப்பிட்டிருந்தது.

(30ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சா. கந்தசாமி எழுதும்....*



5

அவர் ஒரு கனவு கண்டார். இருபது வருஷம் முன்னால் இறந்துபோன அவர் மனைவி, புழுக்கமான பகல் பொழுதில், பெரிய அலுமினிய டப்பாவில் எதையோ கொட்டிக் கொட்டிஅடைத்துக் கொண்டிருந்தாள். வழக்கம் போல, கிழிந்த சிவப்புப் புடவையில் தான் அவள் இருந்தாள். வழக்கம் போல அடுத்த நாள் சாப்பாடு பற்றிய கவலையை அவர் காதில் படும்படி முணுமுணுத்தாள். சம்பளத்திற்குப் பதிலாக நாலு மூட்டை எள்ளும், 'மணமக்கள் நீடுழி வாழ்க' என்று பொறித்த சருவப்பானையும் கொடுத்தனுப்பிய பத்திரிகையில் இன்னும் இருந்து குப்பை கொட்ட வேண்டுமா என்று கேட்டாள். எள்ளுக்குப் பதிலாக அரிசியும் காய்கறியும் கொடுத்திருந்தால் அவள் சலித்துக் கொண்டிருக்க மாட்டாள். போன பண்டிகை காலத்தில் கூட உபரியாக ஒரு சேவல் கொண்டுவந்து தந்தார்கள்.

"நான் கோழி மாமிசம் சாப்பிடுகிறவனில்லையே..."

"என்றாலும் இது உபயோகப்படும்..."

அக்கம் பக்கத்தில் கோழி வளர்த்தார்கள். சேவலை வாங்கிக் கொண்டு போய்த் திரும்பக் கொடுத்தார்கள். அடுத்த பண்டிகைக்கு ஆட்டுக்கிடா கிடைத்தால் நன்றாக இருக்கும் என்றாள் என் மனைவி.

ரங்கநாதன் முற்றத்தில் அரிசிக் குருணையைத் தூவிக் கோழி மேய்த்துக் கொண்டிருந்தார் கனவில். வாசலில் ஏதோ சத்தம். சிறு கூட்டமாகப் படி ஏறி வந்து கொண்டிருந்தார்கள். வயதானவர்கள். சுருட்டுப் பிடித்துக் கொண்டு ராணுவநடை நடந்து வந்தவர் மற்றவர்களை விட முன்னால் நடந்து வந்தார்.

"தவராமல் போய்த் தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறீரா?" அவர்தான் கேட்டார்.

ரங்கநாதன் எழுந்து நின்றார்.

"இதுவரை தவறவில்லை. மாதம் ஒரு முறை எப்படியாவது எல்லா இடத்திற்கும் போகிறேன்".

தடிதடியாகப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு நின்றவர் முன்னால் வந்தார். அவர் பார்வை வாசலில் பதிந்து இருந்தது. யாரையோ எதிர்பார்க்கிறவர் போலத் தோன்றினார்.



"நான் சில விஷயங்களைக் குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். அவற்றையும் கொண்டு போக முடியுமா?" அவர்தான் கேட்டார்.

"அவற்றால் யாருக்கும் உபயோகம் இல்லை...." சுருட்டுக்காரர் சொன்னார். "கேட்கிறவர்கள் விரும்புகிறதை மட்டும் தான் தரவேண்டும்.... அவர்களுக்குச் சாவுச்செய்திகள் தவிர வேறு எதுவும் சுவாரசியமில்லை. செய்திக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையே நுழைத்துப் பார்த்துக் கொள்ள அதுதான் வசதிப்படுகிறது..."

"இந்த போஸ்ட்கார்டுகள் உபயோகப்படுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்..." இன்னொருவர் கையில் மிகப்பழைய ஆனால் எழுதப்படாத போஸ்ட்கார்டுகள். "இதை நான் செய்யவேண்டும்" ரங்கநாதன் கேட்டார்.

இதுவும் அந்த சேவல் போல பிற்பாடு எதற்காவது பயன்படும்...."

அவர் காட்டிய இடத்தில் இருந்து சேவலும், வீட்டுக்குள்ளே ரங்கநாதன் மனைவியும் இப்போது மங்கலாகத் தெரிந்தார்கள். அவள் உதடுகள் அசைந்து கொண்டிருந்தன. இவரைப் பார்த்து ஏதோ கேட்கிறாள். பதில் வராத-தால், கண்களை மேலே உயர்த்தி கழுத்தில் நரம்பு புடைக்க, இன்னும் உச்சத்தில் குரல் எழுப்பினாள். ரங்கநாதன் காதில் வண்டு குடைகிறமாதிரி அவள் குரல் மொணமொணவென்று ஒலிக்கிறது.

"அடுத்த மாதம் அதிகப் பணம் கேளுங்கள்... எனக்கு ஒரு நல்ல புடவை வேண்டும்..."

"இந்தப் பணத்தால் உனக்குப் புடவை வாங்க முடியாது. இது வர ஆரம்பிக்கும் முன்பே நீ இல்லாமல் போய்விட்டாய்" ரங்கநாதன் சொல்கிறார்.

"நாங்களுந்தான் இல்லை......" சுருட்டுக்காரர் பலமாகச் சிரிக்கிறார். இருமல்கள் இடையே மற்றவர்களும் கூடச் சேர்ந்து சிரிக்கிறார்கள்.

"நீங்கள் இல்லாமல் போனதைச் சொல்லத்தானே பணம் தரப்படுகிறது..." ரங்கநாதன் மரியாதையோடு சொல்கிறார். அவர் முகம் வியர்த்து இருக்கிறது.

"முகத்தில் களையே இல்லை... இருந்தாலும் இல்லாவிட்டாலும் பார்க்கத் தெளிவாக இருக்க வேண்டாமா... எழுபது வீட்டுப்படி ஏறி இறங்கப் போகிறீர்... ஒரு தைலம் தருகிறேன். முகத்தில் புரட்டிக் கொள்ளும்.... போகிற இடத்திலும் கொடும்....." பெட்டியுடன் நின்றவர் ரகசியம் பேசுகிற குரலில் சொல்கிறார். "உமக்குக் கூடப் புரட்டி விட்டேனே......" சுருட்டுக் காரரைப் பார்த்து சிநேகத்துடன் கிசுகிசுத்ததை அவர் கண்டு கொள்ளவில்லை.

"தைலமெல்லாம் வேண்டாம். சுவாசம் கொடுக்கிற ஒளி போதும் முகத்துக்கு. கடைகால் கிணற்றில் விழுந்துவிட்டது.

உங்களின் சிறந்த புடவைத் தெரிவுகளுக்கு
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
6 Kumars
SILK HOUSE
1394 GERRARD ST. E., TORONTO, ON
TEL: (416) 465-7131



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டால் தண்ணீர் சேந்திக் குளித்துத் தெளிவாக இருந்திருப்பேன்..." ரங்கநான் மரியாதை விலகாதகுரலில் சொல்கிறார்.

"இந்தப் பாதாளக் கரண்டி பயன்படுமா பாருங்கள்..." கூட்டத்தில் இதுவரை பேசாதவர் சொல்கிறார்.

"அதை வாங்கி வையுங்கள்.... உபயோகப்படும்..." ரங்கநாதனின் மனைவியின் குரல் ஓங்கி ஒலித்தது திரும்பவும். கூட்டம் நின்ற இடத்தை வேப்பமர நிழல் ஒத்தியெடுக்க, கொக்கொக்என்று சத்தமிட்டபடி சேவல் வெறுமனே சுற்றி வந்தது. சுட்டெரிக்கிற வெய்யில்.

"நாளைக்கு சமைக்க அரிசி இல்லை..." "நீயே இல்லை... போய் இருபது வருஷமாகிறது..."

"எழுந்திருமய்யா.... பெண்டாட்டியோடு அப்புறம் சண்டை போட்டுக் கொள்ளலாம்..." சாமியார் எழுப்புகிற குரல்.

விடிந்திருந்தது. சாமியார் சுத்தமான வெள்ளை வேட்டியும், கருப்புத் துண்டுமாக நின்றார். மண்டபம் சுத்தமாக இருந்தது.

"நான்தான் சுத்தப்படுத்தினேன்..." சாமியார் சொன்னார்.

பின்னால் கிணற்றில் தண்ணீர் இறைத்து ரங்கநாதன் பல்விளக்கும்பொழுது திரும்பத்திரும்ப ஆக்டோபஸ் நினைவுக்கு வர, என்ன சம்பந்தம் என்று புரியாமல் குழம்பினார்.

"சீக்கிரம் முகத்தை அலம்பிக் கொண்டு வாரும்... நடக்க ஆரம்பித்தால் ஏழு மணியைப் போல முதல் வீட்டுக்குப் போய்விடலாம்..." சாமியார் எட்டிப் பார்த்து அவசரப்படுத்தினார்.

இவரும் வருகிறாரா என்ன கூட? சரி, பேச்சுத் துணைக்கு ஆச்சு.

"நீர் எங்கே போகிறீர்... நான்தான் போகிறேன்..." சாமியார் புறப்படத் தயாராக இருந்தார்.

"இந்தாரும்..."

வெறுங்கையைத் திருகி ரோஜாப்பூ வரவழைத்து ரங்கநாதனிடம் கொடுத்தார்.

"இது எதுக்கு..."

"சும்மாத்தான்... கை நமநமன்னு அரிச்சுது..."

"போற இடத்துலே கையை வச்சுக்கிட்டுச் சும்மா இருப்பீரா..."

"இருப்பேன்..." சாமியார் தலையாட்டினார்.

தரையிலிருந்து மணல் சிறிய அலையாகக் கிளம்பி நீட்டியிருந்த அவர் வலது உள்ளங்கையைத் தொட்டுத் திரும்பித் தரையில் வழிந்தது. நடக்கும் வேகத்துக்குச் சரியாக அந்த மணல்அலை குதித்துக் கொண்டு கூட வந்தது.

"சேட்டையெல்லாம் பண்ணாம வரதுன்னா வாரும்..."

சாமியார் ஒரு அசட்டுச் சிரிப்புடன் கையைத் தட்டி வேட்டியில் துடைத்துக் கொண்டார். "ஆக்டோபஸ்" என்றார்.

"என்னது..."

"சும்மா ஏதோ ஞாபகம்..."

கடலலைகள் காலைவருடிப்போக ஒன்றும் பேசாமல் நடந்தார்கள்.

*அடுத்த இதழில் தொடரும்......*

**உங்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை

கலைவாணி
ராஜகுமாரன்

“உறவுகள்” என்று
நான்
உரத்துப் பேசலாம்!
ஆனால்...
உள் மனசுக்குத் தெரியும்
அவையெல்லாம்
பொய்யால் நெய்யப்பட்ட
பூந்துகில்கள் என்று...!

என்னைச் சுற்றி...
எப்போதும் காலடி ஓசைகள்...!
ஆனாலும்...
தனிமை என்னைத்
தத்தெடுத்திருக்கிறது...!
என் அயலில்
எத்தனை மனிதர்கள்...
எத்தனை குரல்கள்...
செவிகள் விழித்துக்
கொண்டிருந்தாலும்
மனம் மட்டும்
மௌனத்தின் ஆழத்தில்
உறங்கிப் போயிருக்கிறது...!

“வாழ்க்கை ஒரு நாடக மேடை”
என்று
வர்ணனை செய்தவன் வாழி...!
அவனும் என்போல...
அரிதார மனிதர்களை
அடையாளம் கண்டவனோ....?
நடிக்கத் தெரியாத காரணத்தால்
மேடையிலிருந்து
விலக்கி வைக்கப்பட்டு
காண்பவரையெல்லாம்
கணித்துக் கொண்டிருக்கிற
பார்வையாளனோ...?

கேளுங்கள் மனிதர்களே...!
உலகின்
மிகப்பெரிய பொய்
சொந்தம் என்கிற சொல்...!
அதனிடம்...
சிரிப்பை மட்டுமே
பகிர்ந்து கொள்ளலாம்
நீங்கள்...
அழுது பாருங்கள்...
அது...
அலறியடித்துக் கொண்டு
ஓடியே போய்விடும்...!

நண்பர்களே...!
நான் நேசிக்க முயன்றேன்:
நிராகரிக்கப்பட்டேன்!
ஸ்நேகிக்கத் துடித்தேன்
சிலுவையில் அறைபட்டேன்!
நான்...
பூவாகத்தான் இருந்தேன்..!
உறவுகள் என்னை
உதிரும் முன்னே
ஒடித்துப் போட்டன...!
பூஜையறைக் குத்து விளக்காக
கொலுவிலே முன்பு இருந்தேன்
அவர்கள் என்னைத்
தீவட்டியாகச்
சபித்துவிட்டார்கள்...!
நான்...
இனிய பாடலாய்
அன்றொருநாள் இருந்தேன்
என்னைச் சிதைத்து
ஒப்பாரியாய் மாற்றி
எழுதினார்கள்...!
நான்..
குற்றவாளிகளால்
தூக்கிலிடப்பட்ட
நிரபராதி...!
நான்...
குஷ்டரோகிகளால்
நாடுகடத்தப்பட்ட
சுகதேகி...!
நிர்வாண மனிதர்களால்



கல்லெறிந்து துரத்தப்பட்ட
ஆடை கட்டிய
பைத்தியம்....!

ஆனாலும்...
என் அழுகையைத்
தனிமை தன் கரங்களால்
துடைத்திருக்கிறது!
என் கண்ணீரைக்
கவிதைக் காகிதம்
ஒற்றி எடுத்திருக்கிறது....!
நான் தள்ளாடி விழும்போது
மாயக்கரமொன்று
மடியில் தாங்கியிருக்கிறது...!
இன்னமும்
என் உடலை
அநாதையாய்க் கிடக்காது
உயிரை இழுத்துப் பிடித்திருக்கிற
அந்த உற்ற துணைகளுக்கு
ஓராயிரம் வந்தனங்கள்

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குண்டுகளினால் ஒரு கோலம்"

காலையிலிருந்தே அந்த ஊர் கலவரப்பட்டுக்கொண்டிருந்தது. கடந்த சிலநாட்களாக அயலூரில் விழுந்த முண்டுகளும், எறிகணைகளும் பல குடும்பங்களைப் பிரித்துக் கண்ணீரில் மிதக்கவிட்டன. கடைக்குப் போன மகன் எறிகணையில் அகப்பட்டுக் காலனிடம் போனதாக ஒரு கதை, சமைத்த உணவை உண்ணமுன்னரே சமாதியாகிப் போனதாக இன்னொருகதை, தோட்டத்துக்கு நீரிறைக்கும்போது 'ஷெல்லின்' துண்டொன்றுபட்டு துடிதுடித்து மாண்டகதையென்று அயலூரில் நடந்த அநியாயங்கள் அன்றுகாலையில் காற்றிலே அச்சேறிக் கண்ணீரை வற்ற வைத்துக்கொண்டிருந்தன.

அரசு என்றாலே அநியாயம், அரசியல் என்றாலே அதிகாரம் என்பதை மட்டுமே அறிந்துவைத்திருந்த அந்த ஊர் மக்களுக்கு வியர்வை சிந்தி விளைநிலத்தில் உழைப்பதைத்தவிர வேறொன்றும் தெரியாது. தமது துன்பத்தையும், இன்பத்தையும் அந்த ஊரின் நடுவினில் கம்பீரமாக எழுந்துநின்ற தேவாலயத்தில் இறக்கிவைத்து அதன் மூலம் மனதை ஆற்றவும், தேற்றவும் தெரிந்த அப்பாவி மக்கள் அவர்கள்.

காலகாலமாக தேவனின் காலடியையே கவலைக்கு மருந்தாக வரித்துக் கொண்டவர்கள். வேதாகமம் ஒன்றே தமது வேதனையைக்குறைக்கும் என்பதே அவர்களது தீர்க்கமான முடிவு.

இந்த நிலையில்தான் அயலூரில் நடந்த குண்டுவீச்சு அவர்களை உசுப்பியது. குஞ்சுகளும், குருமானுமாய் குடியிருந்த குடும்பங்கள் குருதி உறைந்தாற்போல் தவித்தன. மேகத்தைக் கிழித்துக்கொண்டு மின்னல் வேகத்தில் பறந்த குண்டுவீச்சு விமானங்கள் அன்றுகாலையில் கொட்டியது குண்டுகளையல்ல; மாறாக துண்டுப்பிரசுரங்களைத் தூக்கி வீசியிருந்தன.

பொதுமக்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தலென்ற தலைப்பில் இருப்பிடங்களைவிட்டு அகன்று ஊரிலுள்ள தேவாலயத்திலும், பாடசாலையிலும் பாதுகாப்பாக இருக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. குண்டுவீச்சு நடைபெறப்போகிறது என்பதற்கான அபாய அறிவிப்பாக அந்தத் துண்டுப்பிரசுரம் அமைந்திருந்தது.




துண்டுப்பிரசுரத்தைக் கண்டதிலிருந்தே துண்டாகிப் போனது அந்தச் சின்னக்கிராமம். அரசியல் நிலைப்பாடுகளின் அடாவடித்தனங்களால் அன்றாடம் ஒருநேரச் சோற்றைக்கூட உண்ணமுடியாத குடும்பங்களில்

**நிலா குகதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனியின் குடும்பமும் ஒன்று. காலையிலிருந்தே ஒரு படி அரிசிக்காக அயற்கிராமம் முழுவதும் அலைந்து களைத்து இறுதியில் வெற்றியோடு திரும்பிய அந்தோனி துண்டுப் பிரசுரத்தைப் பார்த்துத் துணுக்குற்றான். ஆணும், பெண்ணுமாய் இரு குழந்தைகளிலிருந்தாலும் அவனது மனைவி எலிசபெத்துக்கு இன்றோ நாளையோ இன்னொரு குழந்தை பிறக்கவிருந்தது. கொண்டுவந்த அரிசியை அடுப்பேற்றி உலைவைக்க முன்னரே அக்கம் பக்கத்து அயலெல்லாம் அவசரமாகத் தேவாலயத்துக்குத் திரளத் தொடங்கினர். தூரத்தில் 'புக்காராவின்' இரைச்சல் வயிற்றில் புளியைக்கரைத்தது.

பசி, பசியென்று துடித்த குழந்தைகளுக்கு அவித்தது பாதி, அவியாதது பாதியாக சோற்றைக்குழைத்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள் எலிசபெத். தூரத்தே இரைந்த 'புக்காரா' எங்கே போய் ஒளிந்துகொண்டது என வானமண்டலத்தை வலைபோட்டுத் தேடிக்கொண்டிருந்தான் அந்தோனி.

முருங்கையிலைச் சுண்டலும், கருவாட்டுக்குழம்புமாக எஞ்சிய சோற்றை இரண்டாகப்பிரித்து எடுத்துவந்து கொடுத்தாள் எலிசபெத். "கெதியாச் சாப்பிட்டிட்டுக் கோயிலுக்குப் போவம்; 'புக்காராவும், சுப்பர் சொனிக்கும்' சுத்திரதப்பார்த்தால் எப்படியும் இஞ்ச குண்டுவிழும்." சொல்லியபடியே அவசரமாகச் சோற்றை அள்ளியெறிந்தாள் எலிசபெத்.

பரமபிதாவே! இந்தப்பரிதாபமான வாழ்க்கை எப்போ முடியப்போகிறது? சொந்த நாட்டிலேயே நாங்கள் வாழமுடியாத பாவிகளா?... எல்லாம் வல்ல எங்கள் ஆண்டவரே! எப்போது நாங்கள் நிம்மதியாகச் சீவனம் செய்யப்போகிறோம்?.... மனது செபிக்கும் அந்தோனி சாப்பாட்டை முடித்தான். அதற்குள் எலிசபெத் குழந்தைகளையும் அழைத்தபடி கையில் பையுடன் வாசலுக்கு வந்தாள்.

ஒரேயொரு ஆதனமான அந்தப்பழைய சைக்கிளில் மகனையும் மகளையும் ஏற்றித் தள்ளியபடி அந்தோனி நடந்தான், அருகே நிறைமாதக் கர்ப்பிணியான மனைவி எலிசபெத். வழியெங்கும் ஊரவர்கள் தேவாலயத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தனர். செம்மண்பாதையைக்கடந்து அந்தப் பிரதான வீதியில் கால்வைத்தபோது கூப்பிடுதூரத்தில், வெள்ளை நிறத்தில் தேவாலயம் விண்ணை நோக்கிக் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. அதன் உச்சியில் அமைந்திருந்த சிலுவை அபயம் என்று அருள்வாக்குச் சொல்லிக்கொண்டிருந்தது.

மூச்சுவாங்கிய மனைவியைக்கான மனது கனத்துப்போனது. "என்னங்க இதில கொஞ்சம் இருந்திட்டு போகலாமா?.... என்னால ஏலாமக் கிடக்குது..." சொல்லியபடி அவள் அமரவும் தூரத்தில் ஒரு குண்டோசை பூமியை அதிரவைக்கவும் சரியாயிருந்தது. துடித்துப்பதைத்தபடி எழுந்தவளைக் கைத்தாங்கலாய் அணைத்தான் அந்தோனி. வானத்தில் பருந்துகளைக் கண்டவுடன் பயந்துபோய்த் தாய்க்கோழியின் செட்டைக்குள் புகுந்துகொள்ளும் கோழிக்குஞ்சுகளாய் பிள்ளைகளிரண்டும் அவனது காலைக் கட்டிக்கொண்டன. அந்தப் பதைப்பினில் கைதவறிச் சைக்கிள் சரிந்து விழுந்தது. "மாதாவே! எங்களைப் காப்பாற்று" உதடுகள் ஓராயிரம்தடவைகள் உச்சரித்தன.

மெல்ல நடந்து தேவாலயப்படிகளில் கால்வைத்தபோது தேவனை நேரில்கண்டதுபோன்ற மகிழ்ச்சி. எல்லாத்துன்பங்களையும் இப்பிறவியில் அனுபவித்து முடித்துவிட்ட ஆனந்தம். படியினில் ஏற மூச்சுவாங்கிய மனைவியை உள்ளேயிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபெண்கள் கைகொடுத்து உதவினார்கள். அந்த ஊரே அங்கு திரண்டிருந்தது. சாதி, மதபேதமின்றி மக்கள் சகோதரர்களாக இருப்பதைப் பார்த்தபோது, யுத்தம்கூடச் சில நன்மைகளைச் செய்துள்ளதாக அந்தப் பயங்கரமான சூழலிலும் அந்தோனி நினைக்கத்தவறவில்லை.



அத்தனை முகங்களிலும் பாதுகாப்பாக இருக்கிறோமென்ற எண்ணம் மொத்தமாகத் தெரிந்தது. பச்சிளம்பாலகர்கள் பயத்தைமறந்து தேவாலய மண்டபத்தினுள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். பெண்கள் பகுதியில் அன்று வழமைக்குமாறான அமைதி அமுலிலிருந்தது. ஆண்களில் பலர், அந்தோனி உட்பட குண்டுவீச்சு விமானம் புக்காராவா? அல்லது சுப்பர் சொனிக்கா? என்றொரு புதிய ஆய்வில் புலன்களை ஓடவிட்டிருந்தனர். புதிதுபுதிதாக இன்னும்பலர் தேவாலயத்தினுள் வந்துசேர்ந்து கொண்டிருந்தனர்.

இமைக்கும் நேரத்தில் அது நடந்தது. காதுமடல் கிழிபடும்படி ஒரு இரச்சல் வானவெளியில் கேட்டது. பொம்பர்! பொம்பர்! என்ற கூச்சல் தேவாலத்தினுள் எழுந்து அடங்கமுன்னரே கண்களைக் களவாடியது மின்னல்ஒன்று. என்ன இது என்று யோசிக்கமுன்னரே காதுபிளந்தது. அந்தோனி கண்விழித்தபோது புகைமண்டலம்தான் தெரிந்தது. எங்கே இருக்கிறோமென்பதை உணர்ந்துகொள்ள இரண்டு நிமிடங்கள் சென்றன. தேவாலயக் கூரைகளின் உடைந்தபகுதிகளினூடே சூரியன் பயத்தோடு எட்டிப்பார்த்தான். உண்மைபுரிந்து எலிசபெத்தையும், குழந்தைகளையும் நினைத்தபடி எழுந்த அந்தோனியின் அருகே குருதிவெள்ளத்தில் சிலர் குளித்தபடி கிடந்தனர். முனங்கல்களும், பெண்களின் கதறலுமாய் தேவாலயம் திணறிக்கொண்டிருந்தது. மெல்ல எழுந்து தவழ்ந்து எலிசபெத்தும், குழந்தைகளும் இருந்த திசை நோக்கி நடந்தான் அந்தோனி. பெண்கள்


புன்னகை பொன்னகையைவிடச் சிறந்ததல்லவா.... உங்கள் பற்களை பாதுகாருங்கள்!

**ஸ்காபுரோ பல் வைத்திய நிலையம்**

டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்

& சகாக்களும்

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 - மாலை 9.00 மணிவரை

2155 Lawrence Av.E., Suit 10, (at Birchmount) **Tel: 416-750-9969**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபகுதி காட்டெருமைகளின் காலடிபட்டு நசுங்கிய நெற்பயிர்கள்போல் உருத்தெரியாமல் குருதியும், சதைகளுமாய் உறைந்திருந்தது. ஐயோ! கர்த்தரே!.... அத்தனை சத்தங்களிடையே அந்தோனியின் குரல் அவலமாய் ஒலித்தது. எலிசபெத் இருந்த இடத்தில் உடலின் பாகங்கள் உதிரிப்பாகங்களாய் குவிந்திருந்தன. பக்கத்தே முளைவிடமுன்னரே கருகிப்போன அந்தச்சிசு குருதியில் குளித்தபடி இடந்தது. தொப்புள்கொடியைக் குண்டினால்கூட அறுக்கமுடியும் என்ற புதிய விதியை ஸ்ரீலங்கா அரசு இந்தப் பூமிக்கு எடுத்துச் சொல்லியிருந்தது.

ஓலம்! மரண ஓலம்..... குழந்தைகள், பெரியவர்களென்று அனைவருமே அலறிக்கொண்டிருந்தனர். மீண்டுமொரு இரைச்சில்..... இப்போது எஞ்சிய குண்டுகள் அனைத்தையுமே 'பொம்பர்' இங்கேயே இளைப்பாறவிட்டது. தொடர்ந்து குண்டுகளின் ஓசைகேட்டு அந்தத்தேவாலயம் துணுக்குற்றது. "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகண்ணத்தைக் காட்டு" என்று உலகெங்கும் எடுத்துரைத்த தேவன் அன்று இன்னொருமுறை சிலுவையில் அறையப்பட்டார்.

வெள்ளை நிறமாய், சமாதானத்தின் சந்நிதியாய் விளங்கிய அந்தத் தேவாலச்சுவர்களில் குண்டுவீச்சு விமானங்கள் குருதியினால் கோலம்போட்டிருந்தன.

இதுவரை புனிதநீரினால் பூசைசெய்யப்பட்டுவந்த 'பைபிள்' அன்று மனித உறுப்புக்களினாலும், குருதியினாலும் நிறம்மாறித் தெரிந்தது. பூஜைப்பீடங்களும், புனிதப் பொருட்களும் இடிபாடுகளினால் நசுங்கி இறந்து கிடந்தன. ஆலயச் சுவர்களினை அலங்கரித்த அழகிய சொரூபங்கள் முகத்தைத் தொலைத்து மூளிகளாய் நின்றன. பாதுகாப்புக்காகப் போய்இருந்த இடமே பயங்கரத்தாக்குதலுக்குள்ளானது. சர்வதேசத்தின் யுத்த சம்பிரதாயங்களையே சாகடிக்கச்செய்த ஸ்ரீலங்கா அரசின் குண்டுவீச்சு விமானங்கள் இன்னொரு குறிதேடிச் சுதந்திரமாகப்பறந்தன.

அந்தோனி மீண்டும் கண்விழித்தபோது அழுகுரல்களின் ஒலியைத்தவிர எந்த அரவமுமில்லை. ஆங்காங்கே முனகல்களின் ஆதிக்கம்.... அந்தஒலியினூடே ஒன்றை அவனால் இனம்காணமுடிந்தது. அது அவனது மகனின் அழுகையொலி. அம்மா!.... அப்பா!.... என்றவாறு அவனருகே அழுது கொண்டிருந்தான் அந்தோனியின் மகன். எழுப்பமுயன்றபோதுதான் புரிந்தது. அவனது இடுப்புக்குக்கீழே உடலின்பாகம் இல்லாமல் இருந்தது. திரும்பியபக்கமெல்லாம் அழுகையொலி. கண்கள் மூடப்போகும் வேளையிலும் அவன் மனதில் அந்தக்கேள்வி எழுந்தது.

ஏன் இப்படி எங்களை அழிக்கிறீர்கள்?..... பாதுகாப்பான இடம் என்று அறிவித்துவிட்டு ஏனிப்படிப் பாதகம் செய்கிறீர்கள்?.... எத்தனை பேரை அநாதையாக்கி, அழித்துவிட்டு இன்னமும் மனித உரிமைகள் பற்றிப்பேச உங்களுக்கு என்ன யோக்கியதையிருக்கிறது?

அன்றிரவு ஸ்ரீலங்காவின் ஊதுகுழல்களான வானொலியும், தொலைக்காட்சியும் தமது செய்தியறிக்கையில் என்ன சொல்லியிருக்கும்?..... நவாலிப்பகுதியில் புலிகளின் தளமொன்றை முற்றுகையிட்ட குண்டுவீச்சு விமானங்கள் அதனை முற்றாக அழித்தன. மேற்படி குண்டுத்தாக்குதலில் அறுபதுக்கும் மேற்பட்ட புலிகள் இறந்ததுடன் நூற்றுக்கணக்கான பயங்கரவாதிகள் காயமடைந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

*நவாலி தேவாலம்மீதான குண்டுவீச்சின் ஓராண்டு நினைவையொட்டி என் பேனா பிரசவித்த கதைச்சித்திரம் இது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ISO பற்றி

. கருணா

இங்கிருந்து ஒருவர் இங்கிலாந்திற்கு செல்வதாக வைத்துக் கொள்வோம். அவர் தன்னிடமுள்ள Credit Cardஐ அங்கிருக்கும் Banking Mechine இற்குள் செலுத்தும் பொது, அது அதை ஏற்றுக்கொள்கிறது. எவ்வாறு இதை சகல நாடுகளிலும் ஒரே அளவினதாகவும் ஒரே முறையை உடையதாயும் அமைக்கிறார்கள் எந்த அமைப்பு இந்த ஒற்றுமையை பேண உதவுகிறது?

நாம் சாதாரணமாக கமராக்களில் உபயோகிக்கின்ற புகைப்படச் சுருள்களில் ISO என்ற ஒரு சொல்லை அடிக்கடி பார்த்திருப்போம். ISO என்பதைத் தொடர்ந்து 100, 200 என்ற ஏதாவது ஒரு இலக்கமும் இருந்திருக்கும் புகைப்படச் சுருள்களில் அவற்றின் உணர்திறனை இது குறிக்கிறது. அப்படியாயின் ISO என்பது என்ன? அது எதை உணர்த்துகிறது. ISO என்பது International Organization for Standardization என்பதன் சுருக்கமாகும். (குழம்பிவிடாதீர்கள் IOS அல்ல; ISO) ISO என்பது சர்வதேச ரீதியில் நியமமாக தயாரிப்புக்கள், உற்பத்திகள் என்பவற்றை பெறுதலாகும். உதாரணமாக கிரடிற் கார்ட் (credit card), phone card என்பவற்றின் அமைப்பு எங்கும் ஒரே அளவாயும், ஒரே தடிப்பைக் (0.76mm) கொண்டதாயும் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இவற்றையெல்லாம் ISO நிறுவனமே தீர்மானிக்கின்றது.

ISO நிறுவனத்தில் ஏறக்குறைய 100 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ISO ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் 1947ம் ஆண்டு நிறுவப்பட்டது. ISOவின் நோக்கம் சர்வதேச ரீதியில் நியம முறைகளை கையாள்வது ஆகும்.

ஆரம்பத்தில் Electrotechnical துறையிலேயே முதல்முதலில் இந் நியம முறை அறிமுகப் படுத்தப்பட்டது. இதற்கான கமிட்டி ஒன்று 1906இல் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் காரணமாக 1942இல் இவ்வமைப்பின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. மீண்டும் 1946ம் ஆண்டு லண்டனில் 25 நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்து 'சர்வதேச ரீதியில் தயாரிப்புகள் நியமமாக' இருக்கவேண்டும் என்பது தொடர்பாக ஒரு புதிய நிறுவனத்தை ஆரம்பிக்க ஆலோசித்தனர். தொடர்ந்து 1947 பெப்ரவரி மாதம் 23ம் திகதி ISO நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது நியம அளவை தொடர்பான அறிக்கை 1951ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

'ISO' நிறுவனம் உற்பத்திகளையும், சேவைகளையும் நியமமாகப் பேணுவதால் தரத்தையும், பாவனைக் காலத்தையும் அதிகரிப்பதுடன் சரியான விலையும் கிடைக்கச் செய்கின்றது. சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றுடன் தேவையற்று எறியப்படும் கழிவுகளையும் குறைக்கின்றது. எந்தப் பொருளையும் எங்கும் உபயோகிப்பது இலகுவாகிறது. அதிக மொடல்களை உற்பத்தி செய்வது குறைவதால் செலவும் குறைகின்றது. சரி! சாதாரண நிலையில் இவற்றால் என்ன நடைபெறுகின்றது எனப் பார்ப்போம்.

கனடாவில் நாம் பெறுகின்ற ஒரு 'கிரடிட் கார்ட்'ஐ நாம் ஐரோப்பியாவில் கொண்டு சென்றாலும் உபயோகிக்கமுடியும். ISO இல்லாவிடில் சில சமயங்களில் ஐரோப்பியாவில் உள்ள Banking mechineஇல் உங்கள் கார்ட் பொருந்தியிருக்காது. சர்வதேச ரீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடதாசியின் அளவு (paper size) ஒரே அளவாக இருக்கிறது. அப்படியில்லா விடில் சிந்துத்துப் பாருங்கள் எத்தனை சிரமம் என்று. கனடாவில் இருந்து கொண்டு செல்கின்ற ஒரு Walkman இற்கு இலங்கையில் சரியான அளவு Batteryஐ பெற முடிகிறது. இது வெல்லாம் ISO நிறுவனம் சர்வதேச ரீதியில் 'நியம அளவையை' பாவித்தாலேயே சாத்தியமாகிறது.

சரி யார் இந்த 'நியம அளவையை' தீர்மானிக்கின்றார்கள். ஏறக்குறைய 2700 குழுக்கள் இந்த அளவை முறைகளை சரிபார்க்கிறார்கள். இந்த குழுக்களில் நிபுணத்துவம் பெற்ற பிரதிநிதிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், அரச பிரதிநிதிகள், பாவனையாளர்களின் பிரதிநிதிகள் சர்வதேச நிறுவனங்கள் என்பன அங்கம் வகிக்கின்றன. இந் நிறுவனத்தின் மத்திய செயலகம் ஜெனீவாவில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட குழுக்களினால் ஆய்வு செய்யப்பட்ட அறிக்கைகளை தலைவரும் ஏனையோரும் ஆராய்ந்து, மத்திய குழுவில் வாக்கெடுப்பிற்கு விட்ட பின்னர் முடிவு செய்கிறார்கள். சரி எந்தெந்த துறைகளில் இவர்கள் நியம முறையை கையாளுகிறார்கள்?. இலத்திரனியல் மற்றும் மின்சாரத்தைத் தவிர்ந்த ஏனைய சகலவற்றிலும் இவர்கள் நியம முறையை நிர்ணயிக்கிறார்கள். இலத்திரனியல் துறையில் நியம முறையை IEC என்ற அமைப்பு முடிவு செய்கிறது.

சரி நியம முறைகள் சிலவற்றை இப்போது பார்ப்போம். m, Kg, s, A, K, mol, cd என்பவை ஏழு வகையான சர்வதேச அலகு முறைகள். SI அலகு முறையென இவை அறியப்படுகின்றன. இவையும் ISO நிறுவனத்தாலேயே நிர்ணயம் செய்யப்படுகின்றன. பத்திரிகைத் தாளின் அளவுகள் (Paper size), சர்வதேச ரீதியில் வாகனங்களில் உள்ள குறியீடுகள், நாடுகளிற்கான குறியீடுகள், பணம், மொழி என்பவற்றிற்கான குறியீடுகள். புகைப்படச் சுருளில் உள்ள ISO Speed Code (உணர்திறன்). சர்வதேச ரீதியில் ஸ்குரூக்களுக்கான திரெட் அளவு (ISO Metric Screw Threads).

இந்த வகையில் நியம அளவைகள் சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப் படுவதாலேயே வாழ்க்கை முறை இலகுவாகின்றது. எங்கும் ஒரே வகையான அளவு முறைகளைப் பின்பற்ற முடிகிறது. கம்பியூட்டர் துறையில் இப்போது ISO நிறுவனத்தின் பங்கு மிகவும் அதிகமாகியுள்ளது. Internet அறிமுகம் செய்யப்பட்ட பின்பு சர்வதேச ரீதியில் தொடர்புகளை இலகுவாக்க ISO நிறுவனம் பல அளவைகளை நியமமாக்கியுள்ளது. தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் உலகம் சுருங்கிக் கொண்டே செல்லும் போது; அளவை முறைகள் நியமமாக இருந்தால் தான் தொடர்புகள் இலகுவாக இருக்கும். ISO நிறுவனம் இந்த வகையில் பெரும் பங்காற்றி வருகின்றது.

★★★★★

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்குவது ஒரு நல்ல முதலீடா?

~ கரு கந்தையா

சென்ற இதழின் தொடர்ச்சி

நீங்கள் ஒரு வீட்டை வாங்கும்போது 3 முக்கிய நபர்களைச் சந்திக்கிறீர்கள்.

### REAL ESTATE AGENT

உங்களுக்குப் பொருத்தமான வீடுகளை காண்பித்து, பிடித்த வீட்டை நியாயமான விலையில் பெற்றுத்தருவது இவரது வேலை.

### MORTGAGE AGENT

உங்களுக்குப் பிடித்த வீட்டை வாங்க வங்கியில் கடனுதவியைப் பெற்றுத்தருவது இவரது வேலை.

### LAWYER

நீங்கள் வாங்கும் வீட்டில் முன்னைய சொந்தக்காரரின் கடன்கள் பாதிப்புகள் இல்லாமல் செய்து சுமுகமாக உங்கள் பெயருக்கு வீட்டை மாற்றி எழுதித் திறப்பைப் பெற்றுத் தருவது இவரது வேலை.

நீங்கள் வீடு வாங்கும் சிந்தனை இருந்தால் அனுபவமுள்ள நம்பிக்கையான ஏற்கனவே அறிமுகமான Real Estate Agent ஐத் தேர்ந்தெடுங்கள். அப்படி யாரும் அறிமுகமில்லையெனில் அண்மையில் வீடு வாங்கிய நண்பர்கள், உறவினர்களிடமிருந்து அவர்களுக்கு வீடு வாங்கிக் கொடுத்தவரை நீங்களும் நாடலாமா என்று கேட்டு அறிந்து அவரை தொடர்புகொள்ளுங்கள்.

இவரைச் சந்தித்து ஆற அமர இருந்து உங்கள் நிலைமை, தேவை, பற்றிக் கலந்துரையாடுங்கள். இது அவரது நேரத்தையும் உங்கள் நேரத்தையும் வீணடிக்காமல் செயற்பட உதவும்.

Agentஐத் தேர்ந்தெடுத்தபின் அவருடன் விசுவாசமாகத் தொழிற்படுங்கள். விற்கப்போடப்பட்டிருக்கும் எந்த வீட்டையும் அந்த Agentஇனால் காட்டமுடியும். ஆகவே எந்த வீட்டைப் பார்ப்பதெனினும் அல்லது விலைபற்றி அறியவும் அவரையே அழையுங்கள்.

முக்கியமான விடயம்: பல Agent உடன் பார்க்க முயலாதீர்கள் வேறு Agent உடனும் நீங்கள் வீடுகள் பார்ப்பதை அறிந்தால் அவரும் உங்களுக்கு விசுவாசமாக இருக்கச் சந்தர்ப்பம் குறைவு. இது உங்களுக்குத் தான் தீமையைத் தரும்.

வீடு வாங்கும் நோக்கத்துடன் வந்து என்னுடன் கலந்தாலோசிப்பவர்கள் பலமாதிரியான கேள்விகளைக் கேட்பது வழக்கம். பொதுவாகப் பலரினாலும் கேட்கப்படும் பல கேள்விகளுக்குப் பதில் தரலாமென எண்ணுகின்றேன்.

கேள்வி 1: Power of sale

பவர் ஒப் சேலில் (Power of sale) மலிவான விலையில் வீடு வாங்கலாம் என்று எல்லோரும் சொல்கிறார்களே! உண்மைதானா? அல்லது அதில் ஏதும் பிரச்சனைகள் உண்டா?

முதலில் Power of sale (P.O.S) என்றால் என்ன என்று பார்ப்போம். வீடு வாங்கிய ஒருவர் வங்கிக்கு மாதா மாதம் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டத் தவறும்போது, வங்கி அந்த வீட்டைச் சுவீகரிக்க வாய்ப்புண்டு. சுவீகரித்த வீட்டை வங்கி விற்கப் போடுவதைத்தான் P.O.S என்கின்றோம்.

இப்படியான வீட்டை வாங்க முற்படும்போது அந்த வீட்டின் Condition நிலை எப்படியிருக்கிறது என்பதை அறிய வேண்டும். வங்கிக்குப் பணம் கட்ட முடியாமல் வீட்டை விடுவோர் வீட்டை நன்கு பராமரித்திருப்போர் என்பது சந்தேகமே.

இதைவிட வங்கி எடுக்கும் வீடுதானே என வெளியேறும்போது வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் பழுதாக்கி விட்டுச் செல்பவர்கள்தான் அதிகம். Fridge, Stove, Washer, Dryer, Air Conditioning Unit இவற்றை கழட்டி எடுத்துச் சென்று விடுவார்கள். சில சமயத்தில் கதவுகள் கூட கழட்டி விடுவார்கள். காணாமல் போய்விடும்.

ஆக மொத்தத்தில் நிறையத் திருத்த வேலை விட்டு விட்டுச் செல்வார்கள். இதைத் திருத்த நேரம், பணம் உங்களிடம் உண்டா என்பதை அறிய வேண்டும்.

முதல்தரமாக வீடுவாங்குபவர்கள் ஐந்து வீத முதலீட்டுடன் வாங்க முயலுவார்கள். அவர்கள் இதைத் திருத்த $10,000 தேவைப்பட்டால், அழிவது பணம். நல்ல நிலையிலுள்ள வீட்டை ஐந்துவீத முதலீட்டுடன் வாங்கினால் மீதிப் பணத்தை வங்கியிடம் கடனாகப் பெற்றிட முடியுமே.

P.O.S இல் வங்கி வீட்டை விற்கும்போது வீட்டிலுள்ள பொருட்களுக்கு உத்தரவாதம் தராது. உதாரணத்திற்கு அந்த வீட்டில் ஒரு Fridge இருந்து அது கடனுக்கு வாங்கிய ஒன்றாக இருந்தால் அந்த Fridge உங்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. அதை விற்ற கம்பனி வந்து எடுத்துச் சென்றுவிட வாய்ப்புண்டு.

சில சமயம் வீட்டின் நில அளவு வரைபடம் (Survey) அந்த வீட்டிற்கு வங்கியிடம் இருக்காது.
அதனால் உங்களுக்கும் கிடைக்காது.

P.O.S இல் வீடு அநேகமான சந்தர்ப்பங்களில் வெறுமை (Vacent) ஆக இருக்கும். அப்படியாயின் வங்கி அதைக் கூடிய விரைவில் உங்கள் கைக்கு மாற்றி எடுக்கச் சொல்லும். இது அநேகமானவர்களுக்கு சரிப்பட்டு வராது. வாடகைக்கு இருப்பவர்கள் இரண்டு முழுமாத அறிவித்தல் கொடுக்க வேண்டும். உதாரணமாக ஜுலைமாதம் பத்தாம் திகதி அறிவித்தல் கொடுத்தால் ஆகஸ்ட், செப்டெம்பர் இரண்டு முழு மாதமும் முடியும்போதுதான் வெளியேற முடியும்.

P.O.S இல் வாங்குதலில் சில நன்மைகள் இல்லாமல் இல்லை. திருத்த வேலைகள் இருந்தாலும் குறைந்த விலையில் எடுக்கக் கூடிய நிலைமை உண்டுதான். திருத்த வேலைகள் பற்றி அறிவு உங்களுக்கு நன்கு இருந்தால் அதில் இறங்கலாம். அல்லது திருத்த வேலை செய்பவர் பழக்கமாக இருந்தால் அவரையும் கொண்டு அந்த வீட்டைப் பார்ப்பித்து, உத்தேச செலவைத் தீர்மானித்துக் கொண்டு அதில் இறங்கலாம்.

P.O.S இலும் பார்க்க பல தடவைகளில் மலிவான விலையில் வீட்டை வாங்கக் கூடிய சந்தர்ப்பங்களை என் அனுபவத்தில் சந்தித்திருக்கிறேன். உதாரணத்துக்குச் சில

குடும்பத்தில் பிரிவு, விவாகரத்து ஏற்பட்டிருந்தால் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அவர்கள் மலிவு விலையில் விற்கும் சந்தர்ப்பமுண்டு. அந்த வீட்டுக்காரன் வேறு ஒரு வீட்டைப் பார்த்து விரும்பி, வாங்குவதற்காக ஒப்பந்தமும் செய்திருக்கலாம். இதுவும் மலிவான விலைக்கு விற்கத் தூண்டும்.

வீட்டுக்காரன் வேறு இடத்துக்கு இடம்மாற வேண்டிய சூழ்நிலை (Migration) இருந்தால்.

வீட்டுச் சொந்தக்காரன் இழந்திருந்தால் பிள்ளைகள் அந்த வீட்டை விரைவாக விற்பதற்காக மலிவு விலையில் விற்கச் சந்தர்ப்பமுண்டு.

*அடுத்த இதழில்........*

*புத்தம்புது வீடு வாங்குவது நல்லதா. அல்லது பழைய வீடு வாங்குவது நல்லதா? Condominium அடுக்கு வீடு வாங்குவது யாருக்குப் பயன் தரும்? Condominium வாங்குவதில் நன்மை தீமை என்ன. Basementஐ முடித்து வாடகைக்கு விடுதல். இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் என்ன. என்பதை ஆராயலாம்.*

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் மனத்திடம்.... மன உறுதி அல்லது மனத்தெளிவு.... மிகமிக அவசியமானது. எதையும் நன்றாக சிந்திக்கும் திறன் உள்ளமனம்..... நல்லது எது கெட்டது எது என தெளிவுபடுத்தும் மனம் எமக்கு இருக்குமானால்..... எவரும் இலகுவில் ஏமாற்றவோ.... குழையடிக்கவோ (Brain wash) முடியாது... வாழ்க்கையும் வெற்றியளிக்கும்.

## எஸ். ராஜ்மோகன்

நாம் பலபேரால் தினம் தினம் ஏமாற்றப்பட்டு வருகிறோம். ஓர் விடயத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம்......, ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றி ஒருவர் நன்றாக குழயடிக்கிறார்...... அந்தநேரத்தில்..... "அட.... இதுதான்..... நியாயம்; இதுதான் சிறந்தது...." என்றெல்லாம் முடிவெடுத்து உடனே நாம் செயலில் இறங்கிவிடுவோம்.

பின்னர்.... இன்னொருவர் அதேவிடயத்தைப்பற்றி... எதிர்மாறான மற்றும் பக்கவிளைவுகளை எடுத்துக் கூறும்போது உடனே நாம்.... "அட.... இதுவல்லவா நியாயம், இவர் சொல்வதிலும்.... உண்மையிருக்கே.... சீ.... பாழாய்ப்போன மனம்..... அன்றைக்கு இதை சிந்திக்கவில்லையே" என்றெல்லாம் கவலைப்படுவோம்.

ஏன்... இந்த வீண் வம்பு.... பேசாமல் எங்கள் மனத்திடமே... இந்த நல்லது.... கெட்டது... உண்மை.... பொய்.... போன்றவற்றை ஆராயும் விடயத்தை ஒப்படைத்து விடுவோமே...... இதற்கு நாம் என்ன செய்யலாம்.... "மனமே... மனமே... நீதான் என் நீதிபதி...." என்று மனத்திடம் கூறிவிட்டு... பேசாமல் இருந்தால்.... சரியா....? இல்லை; இல்லவே.... இல்லை. அப்போ....?!

முதலில்.... எமது மனத்திற்கு உறுதி... தெளிவு... எதையும் சிந்திக்கும் பக்குவம்.... தேவை.... இதற்கு நாம் எமது தாழ்வுமனப்பான்மையை முதலில் ஒழிக்கவேண்டும். ஏனெனில் அப்போதுதான் எம்மை நாமே... நம்புவோம். எம்மால்..... எதையும் சாதிக்கமுடியும் என உறுதிகொள்வோம். இதன் பின்பு எவரும் எம்மை ஏமாற்றவோ குழையடிக்கவோ முடியாது.

இந்த நிலையில் கூட... ஒருவர் எங்களுக்கு குழையடிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் கூறும் கருத்துகளை... எங்கள் மனம் உள்வாங்கிக் கொள்ளுமே தவிர..... எதுவித முடிவும் எடுக்காது. ஏனெனில் எமது மனம் உறுதியான... சிந்திக்கும் திறன் உடையது. அது... இந்த விடயத்தை.... பலகோணங்களில்.... பல வடிவங்களில்... சிந்தித்து... நல்லதா.... கெட்டதா..... உண்மையா..... பொய்யா.... என பகுத்தறியும்.

சரி.... நடந்தவை நடந்து விட்டது. இனியாவது எமது மனத்தின் சிந்தனைத் திறனை விரிசல்படுத்துவோம். அதற்கு என்ன செய்யலாம்? இன்றிலிருந்து எந்தவொரு விடயத்தையும் நன்றாக சிந்திக்க பழகுவோம். இந்த விடயம்.... ஏமாற்றுதலா.... நல்லதா..... கெட்டதா..... உண்மையா..... இதன் பக்கவிளைவுகள்.... என்ன.... ஏன்.... அவர்.... இந்த விடயத்தை.... எமக்கு கூறுகிறார். அதனால் அவருக்கு ஏதேனும் லாபம் இடைக்கிறதா?..... என்று எல்லாவற்றிலும் சிந்தித்து முடிவெடுப்போம்.... அப்போது யாரும் எம்மை ஏமாற்றமுடியாது.

★★★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்த ரோஜா..... - பேசும் ஆசிரியரின் பேனா!......

## "விடுதலைத் தென்றல்"

அச்சுத்தொடர்புசாதனங்ளின் கருத்துவேறுபாடுகளிலிருந்து விடுதலை பெற்று, ரொறன்ரோவில் இருந்து வெளிவரும் ஐந்து வாரப் பத்திரிகை களும், இரண்டு மாத சஞ்சிகையும் ஒன்றிணைந்து 'தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிக்காக' இம்மாதம் 20ம் திகதி நடைபெற்ற முழுமையான விடுதலைப் பாடல் நிகழ்ச்சிதான் 'விடுதலைத் தென்றல்'.

முல்லைத்தீவு இராணுவ முகாமை கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் வெற்றியை எடுத்துக்காட்டும் வகையில் தீவகம் இராஜலிங்கம் அவர்களால் எழுதி, பொன். சுபாஷ் சந்திரன், வானம்பாடி இசைக் குழுவினரால் பாடப்பட்ட "வேங்கை வருது" என்ற பாடலுக்கு அரங்கி லிருந்த விடுதலை உணர்வு கொண்ட மக்கள் கூட்டம், கைதட்டி பாடலுக்குத் தாளம்போட்டு தம் உணர்வுகளை வெளிப்படுத்தியமை இந்நிகழ்ச்சியில் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

சென்ற இதழில் குறிப்பிட்டிருந்ததைப்போல விடுதலை உணர்வு திணிக்கப்படக்கூடாது. இன்று, தன் தாயை மதிக்கும் ஒவ்வொரு தமிழனும் தன் தாய் நாட்டின் விடுதலைக்கு ஏதோவொரு வழியில் உதவியளிக்கின்றான். ஆனால், பசுமையான நெற்கதிர்களுக்கு மத்தியில் களைகள் அங்காங்கே முளைத்துக்கிடப்பதுபோல எம்மினத்தில் சில கரையானிகள்; உணர்வுமிக்க விடுதலையை ஆரிக்கமுனைகின்றன. பாவம்! தான் அரிக்கமுயல்வது கருங்கற்பாறை என்பதை எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டன.

எம் மண்ணை மீட்பதற்க்காக தம் உயிர்களை அர்ப்பணித்த மாவீரர் களுக்கு தலை வணங்குவோம்.

'போராடிஉயிர் துறப்பவனே மாவீர னாகின்றான்'.

வி. எல். ஆனந்த்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத மலர்
ரோஜா
இதழ்: 14
ஜூன் 15, 96 - ஆகஸ்ட் 14, 96

பிரதம ஆசிரியர்:
**வி.எல். ஆனந்த்.**

உதவி ஆசிரியர்கள்:
**அனுசியா ஆனந்த்.**
**எஸ். ராஜ்மோகன்.**

சிறப்பாசிரியர்:
**'தமிழருவி' சந்திரமோகன்**

பிரசுரம்/விளம்பரம்/விநியோகம்:
**'ரோஜா' வெளியீட்டு நிறுவனம்**

வடிவமைப்பு/அச்சமைப்பு/அச்சடிப்பு:
எஸ். **கிரேஷாத் ரைப்செட்டிங்**

அட்டை அச்சடிப்பு:
**விவேகா அச்சகம்**

அட்டை வடிவமைப்பு/ஓவியம்:
**கருணா - கிரியேட்டிவ் போட்டோ**

# வாசகரின் பேனா...

அன்புடன் ஆசிரியருக்கு,
முதற்கண் எனது வணக்கம்!

சென்ற இரு 'ரோஜா' சஞ்சிகையின் அட்டைப் படம், ஆக்கங்களின் தரம் ஒரு இந்தயச் சஞ்சிகையோ என்ற பிரமிப்பையே ஏற்படுத்திவிட்டது.

வைகாசி மாத இதழின் 'சிறப்பாசிரியர்' கலைவாணி ராஜகுமாரன் எழுதியிருந்த சிறுகதை எமது மனதை ஊருக்கே அழைத்துச் சென்றுவிட்டது. இப்படியான தரமான, சிறந்த எழுத்தாளர்களுக்கு 'ரோஜா' சஞ்சிகை கொடுக்கும் முக்யத்துவம் பாராட்டுக்குரியது!

கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களிடத்தில் வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைவு. ஆனால் 'ரோஜா' சஞ்சிகை தனக்கென ஒரு புதிய வாசகர் வட்டத்தை ஏற்படுத்தியுள்ளது என்று நினைக்கின்றேன். காரணம், ஆரம்பத்தில் அட்டைப்படக் கவர்ச்சிக்காக மட்டுமே வாங்கிய நான் இப்பொழுது 'ரோஜா' சஞ்சிகையின் வாசகர்களில் ஒருத்தி. முக்கியமான தொன்று தமிழ் மொழியினை முக்கியப் படுத்திய 'ரோஜா' சஞ்சிகை இப்பொழுது எமது விடுதலை உணர்வுக்கும் முக்கியம் கொடுப்பதுகண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.
வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

இப்படிக்கு,
தமிழினி இராஜேந்திரம் (ரொறன்ரோ)

**ஆக்கங்கள், விளம்பரங்கள்**
தொலைபேசி: **(416) 425 2884,** தொலைநகல்: **(416) 425 2625**
கே.ரி. சண்முகராஜா (சண்): **(514) 757-5931** (மொன்றியல்)
**"ROJAH"** F.P.P.O., P.O.BOX 45593, 747 DON MILLS RD,
DON MILLS, ON. CANADA, M3C 3S4.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுஷியா



விடுதலைத் தென்றலின் இறுதிப்பாடலாக முல்லை வெ
ஆசிரியர் தீவகம் இராஜலிங்கம் அவர்கள் எழுதி, நிகழ்
மூன்று மணிநேரத்துக்குள் மெட்டமைத்து, நிகழ்ச்யின் இ
சந்திரனும், நாவலனும் இணைந்து பாடப்பட்ட 'வேங்கை வ
என்ற பாடல் சபையினரை உணர்ந்தெழ வைத்தது. ப
'சந்திரிக்கா அம்மைக்கு சனி பிடித்ததடா..." என்ற
சபையினர் கைதட்ட ஆரம்பித்தனர். இதனைத் தொடர்
இசைக்கு பக்க இசையாக சபையோரின் கைத்தாளம்
அந்த உணர்ச்சிமிக்க காட்சி சொல்லித்தெரியாது. நி
பாடலாசிரியரை சபையோர்கள் பாராட்டினார்கள். ★



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள்: 'யுப்பிட்டர்' நவா

வற்றி குறித்து 'நம்நாடு'
கழ்ச்சி ஆரம்பமாவதற்கு
இறுதியில் பொன். சுபாஷ்
வருது வேங்கை வருது....'
பாடலின் இடையில்.....
அடி பாடப்பட்டபோது
டர்ந்து வானம்பாடிகளின்
இணைந்துகொண்டது.
நிகழ்ச்சியின் இறுதியில்

படங்கள் உதவி
JUPITER Photo Ltd.
நவா





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'தமிழருவி'
சந்திரமோகன்

நெஞ்சம் நிறைந்த வாசகர்களுக்கு,

எனது அருமை வாசகர்களை 'ரோஜா' சஞ்சிகை மூலமாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வரிய வாய்ப்பைத் தந்த 'ரோஜா' ஆனந்திற்கும் எனது உள்ளங்கனிந்த நன்றிகள்.

எனது பத்திரிகைப் பணியில் நெஞ்சோடு நெருக்கமாகி, என் முயற்சிகளுக்கு எல்லாம் உரம் சேர்த்து, எனது நினைவுக்குள் வாழும் உங்களோடு மனம்விட்டு சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

பேனா பிடித்தவர்கள் எந்த விடயத்தையும் சிந்தித்து நேர்மையான முறையில் நீதியாக எழுதுவதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்கமுடியாது.

சில எழுத்தாளர்கள் எதிர்மாறான மனோ நிலையில் இருந்து கொண்டு, ஏதோ நான் எழுதுகிறேன் நீங்கள் படித்தே ஆகவேண்டுமென்று எழுதினால், அவை கண்டிக்கப்படவேண்டியன.

நீதியான முறையில் எழுதாதவர்கள் வாசகர்களுக்கு மட்டுமல்ல தன் மொழிக்குச் செய்யும் பச்சத்துரோகம் என்றே கருத வேண்டும். எவ்வளவு ஆயிரக் கணக்கான வாசகர்களைத் தப்பான வழிக்கு அவர்களது எழுத்துக்கள் அழைத்துச் செல்கின்றன.

வாசகர்கள்தான் இந்த விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும். எழுதுபவர்களை விமர்சித்து நெறிப்படுத்தவேண்டும்.

எங்கு நாம் வாழ்ந்தாலும், நமது மண் தலைநிமிர்ந்து தன்மானத்தோடு சுதந்திர தமிழ் ஈழ பூமியாக வாழ்ந்தால் மட்டுமே தலை நிமிர்ந்து தனித்துவத்தோடு வாழ முடியும் என்ற இலட்சியத்தோடு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

'ரோஜா' சஞ்சிகை இந்த நிலைப்பாட்டில் உறுதியாக நிற்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இன்று ஒரு இந்தியச் சஞ்சிகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியளவுக்கு வளர்ந்துள்ளது. ஒவ்வொரு இதழிலும் அட்டைப்படங்களின் கவர்ச்சி வாசகர்களைக் கவருகின்றன. இந்த சஞ்சிகையை வளர்க்க வேண்டியது வாசகர்களாகிய உங்கள் கடமையாகும். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு பெரும் துணையாக 'ரோஜா' மிளிரும் என நம்பலாம்.

எம்மண்ணின் விடுதலைக்காக தம் உயிரைத் தந்துவிட்ட தியாகச்சுடர்களுக்குத் தலை வணங்குவோம்.

வணக்கங்கள் பல.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் ஒருநாள் மாறும்

## வல்லை கமலா பெரியதம்பி

அதோ தெரிகிறான் உதயசூரியன்! வானமண்டலம் எங்கும் அவனது தங்கக்கதிர்கள் பொன் விசிறியாய் விரிகின்றன. அது கண்டு ஜன்னல் திரைகளை இருபுறமும் இழுத்து விரிக்கிறார். ... திருவாளர் சுந்தரேசன். ஊரில் தீட்சை கேட்டவராம். அதனால் கனடாவில் கூட திருநீற்றை திரிபுண்டரமாக முறையாகத் தரித்துக் கொள்வார் சுந்தர். அதுகண்டு தனக்குள் சிரித்துக் கொண்டே அரிசியைக் களைவாள் சுந்தரி. சரியாக ஒரே நேரத்தில்தான் அவர்கள் வீட்டில், இந்தக் கலைக் கிரியைகள் இரண்டும் நடக்கும்.

அன்று மட்டும் என்ன விதிவிலக்கா? சுந்தர் சூரியனைக் கண்டாலும் காணாவிட்டாலும், அந்த சூரிய நமஸ்காரத்தைத் தவற விடமாட்டார். ஏதோ அன்று ஆதவனும் அவரைக் காண வந்தாற்போல், தன் கதிர்முகம் காட்டி சிரிக்கிறானே! ஒருவேளை ஏதும் நல்ல சகுனமோ? நினைத்தவுடன் சந்தியாவின் நிலவு முகம் சுந்தரின் நினைவில் நிழலாடுகிறது. அரை வினாடியில் அவரது கற்பனையில் விரிகிறது, அவளது திருமணக்காட்சி. ஆனால்.... அதற்குள் இடையில் தோன்றி திரையிடுகிறது, மனைவி சுந்தரியின் திருமுகம். தொடர்ந்து அவர் நெஞ்சின் ஆழத்திலிருந்து புற்று அரவம் போல் படம் விரித்துக் கொண்டு, புதைந்து வருகிறது ஒரு நீண்ட பெருமூச்சு.

உலகத்தில் எல்லோருக்கும்தான்.... ஒருநாள் ஒருதாரம் வந்து வாய்க்கிறது, அவரவர் விதிப்படி! ஆனாலும் சுந்தருக்கு வந்து வாய்த்த சுந்தரியைப் போல் வேறு எவருக்குமே வாய்ப்பது... மிக மிக அரிது. "பெயர் பொருத்தம் ஒன்று போதுமே," என்று வாய்க்கு வாய் கூறினர், அவர்களது திருமணத்திற்கு வருகை தந்த விருந்தினர். மனப் பொருத்தத்திற்கும் குறைவில்லைத்தான். இருந்தாலும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும், அந்த இருவரும் இரு துருவங்கள் தான்!

ஒருநாள் தவறாமல் அந்த வேற்றுமை ஏதோ ஒரு வகையில் தோன்றி, வீட்டில் ஒரு பட்டிமன்றத்தை மேடையேற்றி விடும். அதன் விளைவாக அன்று விடிந்த கையோடு தொடங்கி விட்டது ஒரு சூடான வாக்குவாதம்! அதற்கு பிள்ளையார் சுழி போட்டவன் சிந்தூரன் தான்.

"என்னப்பா இன்றைக்கு அந்த புரோக்கர் சொன்ன 'பார்ட்டி (party)'' வீட்டிற்கு வருவினமோ இல்லாவிட்டால் அம்மா அந்த ஆளுக்கு சொன்ன விஷயம் கேட்டதால், வராமல் விட்டாலும் விட்டு விடுவினமோ?" என்று இழுத்துக்கொண்டே பேச்சைத் தொடங்கினான் சிந்தூரன்.

"ஏன் மகனே, நான் என்ன சோதிட வித்தையில் 'மெடல்' வாங்கிய பேர்வழியா, உனக்கு ஆரூடம் சொல்ல? அம்மாவைக் கேள். அவதானே எதற்கெடுத்தாலும் பஞ்சாங்கம் பார்க்கிற பேர்வழி" என்று குசினிப் பக்கம் பார்வையை நீட்டியவாறு, அலுத்துக்கொண்டார் சுந்தர்.

வெண்சூடுபிடித்த சூரியகாந்தி எண்ணெயில், கடுகு, சீரகத்தை இரு விரலால் கிள்ளிப் போட்ட சுந்தரி ஒரு துள்ளுத் துள்ளினாள். கடுகு பொரிவதுபோல் 'சட சட'வெனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரிந்து தள்ளினாள். "ஓமடா மகனே! நான் தான் பெரிய காண்டம் வாசிக்கிற சோதிட மேதை என்று வாசலில் 'போர்டு (board)' போட்டிருக்கிற பேர்வழி! அதை உன் அப்பாவிற்குச் சொல்லு. ஏதோ வீட்டில் ஒரு சுப காரியத்திற்கு நல்லநாள், நட்சத்திரம், திதி, யோகம் என்று பார்ப்பேன். அதற்குமேல் துலாவில் இருக்கிற வெள்ளி இன்னும் து;லாவில்தான் நிற்குதோ, அல்லது கிணற்றுக்குள் குதித்து விட்டதோ, என்றெல்லாம் எனக்குச் சத்தியமா தெரியாதப்பா! என்றாள் சுந்தரி.

தன் அறைக்குள்ளிருந்து கழுக்கென்று சிரித்தாள் சந்தியா, காலில் 'பான்ட்டிகோசை (pantyhose)' முழங்காலுக்குமேல் இழுத்தவாறு. காதையும் கொஞ்சம் தீட்டிக் கொண்டாள். அவள் எதிர்பார்த்தபடி அப்பாதான் அடுத்து குரல் கொடுத்தார். "இங்கேபார் சுந்தரி மகன் கேட்ட கேள்விக்குத்தான் நான் பதில் சொன்னேன். உண்மையாக உன்னை நக்கல் அடிக்கவில்லை. இப்ப கொஞ்ச நேரத்தில் அந்த புரோக்கர் எம் முடிவான கருத்தைக் கேட்பார். அந்த ஆளோடு என்னைப் பேசவிட்டால் விஷயம் லேசாக முடிந்து விடும்" என்று கெஞ்சினார் சுந்தர்.

"ஆதற்கு என்ன? நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் ஒரு கண்டிஷன் உங்களுடைய வழக்கமான பொய்கள் மட்டும் இன்றைக்கு மருந்துக்கு ஒன்று தன்னும் தலைநீட்டக் கூடாது" என்று கட்டளை இட்டாள் சுந்தரி.

சுந்தர் தலையைச் சொறிந்தார். சிந்தூரன் தான் "சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை" என்பதை நிரூபிக்க விரும்பினான். என்வே அப்பா உங்களுக்கு அம்மாவின் குணம் தெரியாதா? அவ அரிச்சந்திரன் பரம்பரை என்று, இன்னும் தான் உங்களுக்கு உறைக்கவில்லையா? ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணம் செய்யலாம் என்பது உங்கள் கட்சி. ஆனால், உண்மையே பேசு, நன்மையே பெறுவாய்" என்பது அம்மாவின் உபதேசம். ஏன் அம்மா பொய்யும் இல்லாமல் மெய்யும் இல்லாமல் சில விஷயங்களைச் சொல்லாமல் விட்டு விடுவோமே" என்றான் சுந்தர் அப்பாவிற்கு ஆதரவாக.



"டேய் மகனே! அப்பாவிற்குப் பிள்ளை தப்பாமல்தான் பிறந்திருக்கிறாய். அதனால் அவருக்கு வக்காளத்து வாங்கிக் கொண்டு, என்னோடு வாதாடுகிறாய். இது சந்தியாவின் விஷயம். அவள்தான் இதற்கு ஒரு முடிவுசொல்ல வேண்டும்" என்று அடித்துச் சொன்னாள் சுந்தரி. உடனே சந்தியாவுக்கு முன் தான் முந்திக்கொண்டு பேசினார் சுந்தர் "ஆகா! உன் மகள் என்ன சொல்லுவா என்று எனக்குத் தெரியாதா? 'தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை' என்ற இலக்கணத்திற்கு சரியான எடுத்துக் காட்டு யார் என்றால் அது எங்க சந்தியாக் குட்டிதான்! அம்மாவின் அடி ஒற்றி நடக்கும் அருமையான மகள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப்போலவே அவவும் வரம்பெற்ற ஒரு உண்மை விளம்பி" என்று சுரத்தில்லாமல் சொன்னார் சுந்தர்.

சிந்தூரன் சிரித்தான். சுந்தரியிடம் சென்று அவன்தன் கைவரிசையைக் காட்டினான். அம்மாவை ஒரு அணைப்பு அணைத்து, கன்னத்தில் ஒரு முத்தம் இட்டால் போதும்! தன் காரியம் பலித்து விடும் என்பது சிந்தூரனுக்கு தெரியாதா என்ன? சுந்தரிக்கும் அவன் கிட்ட வந்ததுமே, விஷயம் புரிந்து விட்டது.

"வா மகனே வா! நீயும் உன் அப்பாவைப்போல்தான். காரியம் ஆகும் வரையில் காலைப்பிடிப்பாய். பிறகு கழுத்தைப் பிடிப்பாய். கல்யாணம் ஆன காலம் முதல், உன் தகப்பன் செய்யாத தந்தரமா? போடாத வேஷமா? அப்பப்பா! சண்டை போட்டு என்னை சரண்டர் (surrender) பண்ணச் செய்யலாம் என்று சட்டி பானையை உடைத்து கூட ஆட்டம் போட்டுப் பார்த்தவர் அல்லவா! அப்போதெல்லாம் எனக்கு வாற கோபத்தில், உலக்கையை எடுத்து உரலுக்குள் போட்டு சக்கையாக இடிக்க வேணும் போலிருக்கும், என்று உக்கிரமாகக் கூறினாள் சுந்தரி.

"அரிசியையா? நெல்லையா?" என்று ஐயத்துடன் கேட்டான் சிந்தூரன். "இல்லையடா உன் அப்பாவின் தலையை" என்றாள் சுந்தரி. அதுகேட்டு சுந்தர் மட்டுமல்ல, அவ்விடம் வந்த சந்தியாவும் சேர்ந்து, நாலு பேருமே சற்று சிரித்து மகிழ்ந்தார்கள்.

அதன்பின் சந்தியா தன் முடிவைக் கூறினாள். "அப்பா உங்கள் ராஜதந்திரம், அரசியலுக்குத்தான் அவசியம் தேவை. என் திருமணத்திற்கல்ல. பொய் சொல்லிக் கல்யாணம் செய்வதில் எனக்கு அடியோடு விருப்பமில்லை. அதனால் அம்மாவையே அந்த புரோக்கரிடம் பேசச் சொல்லுங்கள்" என்று மெதுவாகச் சொன்னாள்.

"சரி சந்தியா, ஆனால் அந்த மாப்பிள்ளையின் தகப்பன் நிரந்தரமான தொழில் செய்யும் பொம்பிள்ளை என்றால் நல்லது என்று சொன்னாராம். உனக்கு எப்படியும் மூன்று மாதத்தில் வேலை நிரந்தரமாகி விடும் தானே? அதனால் அதை இப்பவே நிரந்தரம் என்று சொன்னால் தவறல்ல" என்று சொன்னார் சுந்தர்.

அது கேட்டதும் அகப்பையும் கையுமாக அவ்விடம் வந்தாள் சுந்தரி. "இங்கே பாருங்கோ இன்றைக்கு இருப்பாரை நாளை இருப்பார் என்று சொல்ல முடியாத வாழ்வு, இந்த உலக வாழ்வு. இன்னும் மூன்று மாதத்தில் என்னென்ன நடக்குமோ. பிறகு மாப்பிள்ளை சீவிய காலம் முழுக்க "உன் அப்பா முழுப்பொய்யைச் சொல்லித்தானே உன்னை என் தலையில் கட்டி வைத்தார்" என்று சந்தியாவின் கழுத்தைத்தான் அறுப்பார். உங்களை அல்ல அப்படி ஒரு சொல் என் காதில் விழுந்தால் பிறகு நான் உயிரோடிருக்க மாட்டேன்." என்று உறுமி விட்டு குசினிக்குள் சென்று மறைந்தாள்.

"புஸ் என்று சோடாப்போத்தல் வாயை பொத்துக் கொண்டு வரும் 'காஸ்' (Gas) போல் மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டார் சுந்தர். சுந்தரியும் யோசனையின் ரேகைகள், நெற்றியில் கோலமிட கையைத் துடைத்துக்கொண்டே வெளியே வந்தாள்.

சரியாக குறிப்பிட்ட நேரத்திற்கு தொலைபேசி தன் மணிக்குரலை எழுப்பி கிணுகிணுத்தது. கேட்டதும் அந்த நால்வரின் இதயங்களும் ஒரு விநாடி தம்மையறியாமலே ஆவலால் பரபரத்தன. கையெடுத்துக் கும்பிட்டவாறு ஒரு கணம் கண்ணை மூடினாள் சுந்தரி. அவளது குலதெய்வம் மனத்திரையில் தோன்றியதும்..... உளத்தூய்மை தந்த உறுதியுடன் தொலைபேசியைக் கையில் எடுத்தாள் சுந்தரி.

அவள் ஒன்றையும் ஒளிக்காமல் மிகத் தெளிவாகப் பேசினாள். சந்தியா பற்றிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விபரங்களையும் வரிசையாகக் கூறினாள். பத்தாம் வகுப்பில் அவள் படிக்கும்போது, அவளுடைய சகமாணவன் ஒருவன் அவளைக் காதலித்த கதையையும் கூறினாள். அந்தப் பையனைச் சந்தியா ஆதரிக்கவில்லை. ஆனால் அதற்காக அவனை உதறித் தள்ளவுமில்லை. வெறுக்கவுமில்லை. பின்னால் பெற்றோர்கள் மறுத்த காரணத்தால் தான் அந்தப் பையன் தானாகவே சந்தியாவை சுற்றுவதை நிறுத்தினான். ஆனால் ஊரில் உள்ள உதவாக்கறைகள் சந்தியாவைப் பற்றியும் அந்தப் பையனைப் பற்றியும் அக்காலத்தில் அவதூறு சொல்லத் தவறவில்லை. அதன்பின் சந்தியாவைப் பொறுத்தவரை, அயலவர் பேசும் வம்புப் பேச்சு என்றாலே ஒரே வெறுப்புத்தான்!

இன்று சந்தியா ஒரு கனடா பிரஜை. சுதந்திர உணர்வுள்ள ஒரு இளம் தமிழ்ப்பாவை. பழமையான மூட நம்பிக்கைகளை ஒதுக்கியவளாயினும் நம் பழந் தமிழ் கலாசாரத்தை போற்றும் பண்புள்ளவள். அதே கொள்கையுள்ள ஒருவனைத்தான் அவளால் மதிக்க முடியும். குங்குமம் ஒரு தெய்வீகமான மக்களச் சின்னம் என்பதில் நம்பிக்கையுள்ள மங்கைதான் சந்தியா. வேலைக்குப் போகும் வேளையில் மட்டுமே மேலைத்தேசத்தவர் உடைகளை, தேவைக்குத் தக்கவாறு அணிவாள். உடல் குறைகளை மறைக்கவும், மானத்தைக் காக்கவும், மனதைக் கவரவும்..... ஆறுயார் புடவைபோல் ஒரு சிறந்த ஆடை உலகிலேயே கிடையாது என்பது சந்தியாவின் உறுதியான நம்பிக்கை.

சுந்தரியின் வரலாற்றுச் செய்திகளை புரோக்கர் ஒரு வார்த்தையும் விடாமல் மாப்பிள்ளை வீட்டாருக்குசொல்லியே ஆகவேண்டும் என்ற வேண்டுகோளுடன் தான் அன்று அந்த தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

காலையில் நடந்த சம்பவங்களை மீண்டும் மீண்டும் அசை மீட்டவாறு நடைபயின்றாள் சந்தியா என்னும் அந்த மடவன்னம். அதை 'சப்வே' ஓரத்தில் நின்ற பல இளங்காளையரின் கண்கள் வெகுவாக ரசித்தன. ஆனால் நேரடியாக அவளை ஏறிட்டுப் பார்க்க அவர்கள் ஏனோ அஞ்சினர். சந்தியா ஒரு வேளை, 'பாரதி கண்ட புதுமைப் பெண்ணோ' என எண்ணினான் சஞ்சீவ். நிமிர்ந்த நடை என்ன, நேர் கொண்ட பார்வை என்ன, அடடா! நெருங்கினால், நெருப்புத்தான் என்பது ஒரு பார்வையிலேயே புரிந்து விடும்.



"ஹாய் சஞ்சீவ்! என்ன நீங்களும் இன்றைக்கு லேட்டா?" என்று தன் செவ்விதழ் இரண்டும் பவளச் செப்பென விரிய.... கேட்டாள் சந்தியா.

இல்லை, நான் நேரத்தோடு வந்து விட்டேன். இருந்தாலும் உங்களைக் காணாமல் ரயில் ஏற மனம் வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டால் தினமும் உங்கள் வருகை கண்டு நான் என் 'வாட்சை (watch)' செட் பண்ணுவது வழக்கம். இன்று ஏன் லேட்? ஏதாவது பிரச்சனையா?" என்று கவலையுடன் கேட்டான் சஞ்சீவ்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. வழமையான சங்கதிகள் தான். நேற்று சொன்னேனே ஒரு புரோக்கர் வீட்டுக்கு வந்த சங்கதி பற்றி. அதைப்பற்றித்தான் வீட்டில் கொஞ்சம் கருத்து வேற்றுமைகள். எனக்குத்தான் இந்த ஒளிவு மறைவு என்றால் அடியோடு பிடிக்காதே. அதனால், காலையிலே எங்க வீட்டில் உள்ள நாலு பேரிடையே கொஞ்சம் தகராறு. அவ்வளவுதான்" என்று வெளிப்படையாகவே கூறினாள் சந்தியா.

ஒருநாள் சப்வேயில் நேர்ந்த சந்திப்பு.... ஒரு வித நட்பாகவே மாறிவிட்டது. சஞ்சீவிற்கு சந்தியா ஒரு புதிராகவே தோன்றினாள். பொதுவாக பட்டாம் பூச்சி போல், பார்ப்பவரை மயக்க நினைக்கும் பருவப் பாவையரை பார்த்துச் சலித்தவன் சஞ்சீவ். சந்தியாவை பார்த்தாலே தினந்தோறும் அவனுக்கு எத்தனையோ அற்புதக் கற்பனைகள் தோன்றும். அவள் ஒரு பாலைவனப் பசுந் தரையோ அல்லது பன்னிரண்டு ஆண்டுக்கோர்முறை பூக்கும். குறிஞ்சி மலரோ? அல்லது எவர் கைக்கும் எட்டாத உயரத்தில் ஊசலாடும் தெவிட்டாத கொம்புத்தேன்தானோ? இப்படி எல்லாம் அவன் நினைப்பதை அவள் அறிந்தால்.....! போச்சு! அதன்பின் சஞ்சீவ் பாடு அதோ கதிதான்!

சந்தியாவிற்கு அவன்மீது அப்படி ஒரு அசையாத நம்பிக்கை. அவளைப் பொறுத்தவரை அவன் ஒரு ஆண்மகன், அதுவும் இளைஞன் என்ற எண்ணமே தோன்றுவதில்லை. உற்ற சிநேகிதி ஒருத்திக்கு எப்படி ஒரு கன்னிப்பெண் உள்ளக்கிடக்கையை உரைப்பாளோ... அப்படித்தான் சந்தியா, சஞ்சீவிடம் சற்றும் தயங்காமல் தன் மனதில் தோன்றியதை எல்லாம் கொட்டித் தள்ளுவாள். அன்றாடம் தம் வீட்டு நடப்புகளை பரிமாறிக் கொள்வதில் அவ்விருவருக்குமே ஒரு ஆறுதல்.

சந்தியா அன்றைய செய்திகளைக் கூறியதும் சஞ்சீவ் சிரித்தான். "அப்ப இன்றைக்கு உங்கள் வீட்டில் உங்கள் விவாகப் பேச்சு ஒரு நல்ல முடிவுக்கு வந்துவிடும் இல்லையா?" என்று கேட்டான். சந்தியா அதுகேட்டு விரக்தியுடன் பதில் அளித்தால்.

"சரியாப் போச்சு! எங்கள் தமிழ் வரன்களைப் பற்றி உங்களுத்குத் தெரிந்த லட்சணம் இதுதானா? அப்பா அம்மா விருப்பப்படி செய்யட்டும் என்று சிலர் சொல்வது ஏன் தெரியுமா? நல்ல கொழுத்த சீதனம் கிடைப்பதோடு மற்ற அம்சங்களும் சரியாக அமைந்துவிடும் என்பதால்தான். புரோக்கர் சொன்ன நிபந்தனைகள் ஒன்றா, இரண்டா? பெரிய பட்டியல்! சுருங்கச் சொல்கிறேன் கேளுங்கள். பெண் சிவப்பாக அழகாக இருக்க வேண்டும். நல்ல குடும்பம் வீட்டுச் செய்காரியம் உயர்ந்த படிப்பு அத்தோடு நிரந்தரமான வேலையும் வேண்டுமாம்" என்றாள் சந்தியா.

"உங்களுக்குத்தான் அந்த எல்லா அம்சங்களிலும் ஒரு குறையுமில்லையே?" என்று கூறினான் சஞ்சீவ். நல்லாச் சொன்னீங்கள், எனக்கு மூன்று மாதங்களுக்குப்பின்தான் வேலை நிலைக்கும். அத்தோடு பள்ளிக்கூடத்தில் ஒரு பையன் என்னைக் காதலித்த கதைக்குப் பலர் கண் மூக்கு வைத்து கயிறு திரித்த கதை வேறு! இதை எல்லாம் எங்கம்மா ஒளிக்காமல் சொல்லி விட்டா. தன் கற்பைப்பற்றிக் கவலைப்படாமல் கண்டபடி திரிகிறவனுக்கும் பெண்டாட்டி மட்டும் கற்பரசியாக இருக்க வேண்டும் என்று ஆசை. ஆதனால் நிச்சயம் அந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர் எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப்பக்கம் இனித் தலைவைத்துப் படுக்கமாட்டார்கள். அப்படித்தான் வந்தாலும் நான் எனது கொள்கைகளைப் பற்றி அந்த மாப்பிள்ளைக்கு சொல்லாமல் விடமாட்டேன். பெண் உரிமைகளை மதிக்கிற ஒருவனுக்குத்தான் நான் மாலையிடுவேன்" என்று விரிவாக விளக்கினாள் சந்தியா.

"பொய் என்னும் அடிப்படையின்மேல் எழுவது, மணல் வீடாகத்தான் இருக்குமே தவிர மனங்கொண்ட மாளிகையாக ஒருபோதும் மாறாது" என்றும் சொல்லிவிட்டுத்தான் சப்வே நிலையம் ஒன்றில் இறங்கி நடந்தாள் சந்தியா.

மாலை ஆனதும் வழமைபோல் வீடு திரும்பிய சந்தியாவிற்கு ஒரே வியப்பு! வரவேற்பறையில் ஒரே கூட்டம்! நல்ல வேளை மாப்பிள்ளையின் பெற்றோர் வாசலைப் பார்க்க அமர்ந்திருந்தனர். சந்தியாவைக் கண்டதும் அவர்கள் முகங்கள் மலர்ந்தன. மாப்பிள்ளையின் முதுகு மட்டும் சந்தியாவின் கண்ணில் பட்டது. சந்தியாவிற்கு ஒரே குழப்பம்.. எல்லா உண்மைகளையும் தெரிந்து கொண்ட பின்னும் அவர்கள் வந்த விந்தைதான் என்ன? சந்தியாவிற்கு அடுத்த அதிர்ச்சி. பையனின் அப்பாவின் பேச்சு "நாங்கள் இப்படி ஒரு மருமகள் கிடைக்க உண்மையில் கொடுத்து வைத்தவர்கள்தான். பொண்ணுக்கும் மாப்பிள்ளையைப் பிடித்தால் சரி கலியாணத்தை நடத்தி விடலாம்" என்றார் அவர். அதுகேட்டு மாப்பிள்ளைப் பையனும் எழுந்து சந்தியாவை நோக்கி வந்தான். அவனைக் கண்டதும் சந்தியாவின் நேர்கொண்ட பார்வை, அன்று ஏனோ நாணப்போர்வை பூண்டுவிட, அவளது தூய இதயமோ, அதிசயத்தால் விரிந்து மலர்ந்தது. ஏன் எனில் அவள் எதிரே ஏறு நடை போட்டவாறு தன் சிரிக்கும் விழிகள் விரிந்து வரவேற்க நெருங்கி வந்தவன் வேறு யாருமல்ல, சஞ்சீவ்தான்!

★★★★★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈந்தேன் இங்கே

~ ஈழத்தமிழினியன்

சொல்லெடுத்து சுவை பார்த்து
பல்சுவையாய் யானேது தர
முல்லையென முத்துதிர்த்து
பல்லிழித்து நீ களிப்பதற்கல்ல - சிந்திப்பதற்கு.

நல்லவர்கள் நானிலத்தில்
உள்ளாரென யான் வந்த பூமியிலே
வல்லவனாய் வையத்தே வாழ வழி சமைத்த
வள்ளுவனார் சொன்ன குறளொடு


ஒன்றியொரு கதை தந்தால்
நன்கதனை சிந்தையிலே சேர்த்தே
தன்புனல் தடாகமதில் - ஆம்
உன் நல்லிதையப் பொய்கையிலே

ஏற்றி நீயும் புனிதனாக வாழ
"ஆற்றின் அளவறிந்து ஈக; அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி" யென
நாற்றொன்றை நட்டுச் சென்றான் - வள்ளலவன்

ஈதிங்கு ஏதுபோந்தான்
ஈகைபற்றியென விழைந்தால்

கனிபறிக்கவொரு கூலிதனை மரத்திலேற்றி
இன் கனியதனைப் பறித்துவரக் கூலி
இனிப்பான கனியெண்ணிக் கரம் சேர்த்தே
இனிதாக அவை கவ்விச் சுவைத்து
இவன் தனுக்கும் ஓர் வயிறுண்டு
என்பதனை மறந்து, அக்கூலிதனுக்கு
கனி கொடுக்க விழையா நின்ற

ஈதிந்தபெரு மனிதர்க்கோ சிறுகுறளால்
ஈகைதனை அளவறிந்து செய்கவெனச்
சொல்லிட விழைந்தாங்கே
ஈகையிலே உனையொடுக்கி அனைத்தையுமே
ஈயாது போகினும் - அளவறிந்து
இருகனி கொடுத்து அவன் ஆவல் தீர்த்தாலென்ன
என விரும்பி இதனைச் சொன்னார் போலும்
என்றென் எண்ணமதில் உதித்த
இந்த உளக் கருத்ததனை ஈந்தேன் - இங்கே!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை, இந்திய, கனேடிய உணவகம்

# Take Out & Catering

உங்கள் அனைத்து வைபவங்களிற்கும் நீங்கள் விரும்பிய உணவுகளையும் சிற்றுண்டி வகைகளையும் சுவையுடன் செய்து தருகிறோம்.

## சுவை, அது *GASA!!!*

மலிவு விலையில்....

| | |
|---|---|
| * Rice with 4 Veg. + 1 Meat Curry | $4.75 |
| * 10 Chicken Wings with Fries | $3.99 |
| * 5 Chicken Wings with Fries | $1.99 |
| * கொத்துரொட்டி (ஆடு, மாடு, கோழி) | $3.99 |
| * 2 ரொட்டி + கறி | $2.99 |

## Tel: (416) 321-1219

2950 Kennedy Road, Unit. 3
(Kennedy & North of Finch)
Scarborough, ON




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் கவர்ச்சியும் (Love and Attraction)

'காதல்' என்ற சொல்லை உச்சரித்தாலே ஒரு கிளுகிளுப்பு ஏற்படுகின்றது. உலகெங்கும் எல்லோராலும் அடிக்கடி உச்சரிக்கப்படும் இச்சொல் இலக்கியம், நாடகம், சங்கீதம், சினிமாத்துறைகளில் இழையோடும் விதமே தனித்துவமானது. இனம் புரியாத உணர்ச்சியை ஊட்டும் இச் சொல் அனைவரிடமும் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தும் அபார சக்தி கொண்டது. அனைவராலும் விரும்பப்படும் காதல் உணர்வினை அளப்பதற்கு மட்டும் கருவியில்லை. மந்திரசக்தி படைத்துள்ள இச்சொல் பல்வேறு நிலைகளில் பல்வேறு அர்த்தங்களையுடையது என்பது உளவியலாளரின் கருத்தாகும்.

எஸ். பத்மநாதன்
BA HONS, DIP- IN -ED

ஆய்வாளர்களும், புலவர்களும் வர்ணித்து நிற்கும் இக்காதல் உணர்வு பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் கருப்பொருள் காதல் பற்றியதாகும். யாயும் யாயும் யாராகிலரோ, எந்தையும் நுந்தையும் எவ்வழிக்கேளிர்' என்ற சங்க இலக்கிய அடிகளில் காதலர் தாய் தந்தையர் பற்றிக் கவலை கொள்ளவில்லையென்பது புலனாகின்றது. அமராவதி அம்பிகாபதி அனார்கலி சலீம் ஆகியோர்கள் காதல் சாம்ராஜ்யத்தில் இடம்பெற்ற வேளையில் ரோமியோ யூலியட் காதல் பற்றி சேக்பியர் உயர் காவியமே படைத்தார். பாரதி கூட காதல் காதல் காதல். காதலக் போயிற் காதல் போயிற் சாதல் சாதல் சாதல்! என்கிறார். அனைத்தும் இலக்கியம் படைத்த காதல் தத்துவங்கள்.

பொதுவாக நாம் கருதுகின்ற 'காதல் (Love)' என்ற சொல்லுக்கு தெளிவான வரைவிலக்கணம் கூறுவது கடினமாகும். பல்வேறு அர்த்தங்களைப் பிறப்பிக்கும் சொல்லாக அது உள்ளத்தினால் தொடர்ந்தும் ஆய்வு செய்யப்படும் கருத்தாகவும் விளங்குகின்றது. காதல் பல்வேறு உணர்வு மட்டங்களை இணைக்கவல்லது; தோற்றுவிக்கவல்லது என்று பொதுவாக கூறலாம்.

காதல் பற்றிய உணர்வுகள் பல்வேறுபட்டவை. பெற்றோர்கள் பிள்ளைகள் மீது செலுத்தும் அன்பு (Parental Love) நாட்டின் மீது கொண்டுள்ள பற்று (Patriotism) குடும்ப உறவு (Family affection), கடவுள் மீது காட்டும் அன்பு (Godly Love) இனத்தின்மீது ஏற்படும் பற்று (Raeial Love) சேவையில் காட்டும் பரிவு (Actruistic Love) போன்றவை உள்ளதெனினும் அதிகமாக ஆய்வுக்குட்பட்டுள்ளதும் அதிக அளவில் மக்களை ஈர்த்து வருவதும் பாலியல் காதல் (Erotic Love) ஆகும். ஆங்கிலத்தில் 'Love' என்ற சொல்லாட்சியை தமிழில் அதன் தேவை கருதி விரிவாக்கின் நேசம் (Affection) உறவு (Relationship) பரிவு (Sympathy) கருணை (Compassion) விருப்பம் (Fondness) தயவு (Mercy) அன்பு (Kindness) போன்ற பல்வேறு அர்த்தங்களைப் பிறப்பிக்கின்றன. உண்மையில் அனைத்தும் 'Love' என்ற மூலச் சொல்லின் அடியிலிருந்து உருவாகியவையே ஆகும்.

பாலியல் ரீதியிலாக எழுகின்ற காதல் உணர்வு பற்றி பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் வாயிலாக ஆய்வு செய்யப்பட்டதன் பின்னரே இதனை ஒழுங்குபத்த முடிந்துள்ளது. பாலியல் மன எழுச்சி ரீதியாக தோன்றி இருவரை ஒன்றிணைப்பது பாலியல் காதல் வடிவமாகும். அதாவது திருமண உறவிற்கு இழுத்து செல்லும் தன்மை இதனால் எழுகின்றது.
1979இல் டொரத்தி ரெனோவ் (Dorothy Tenov) என்ற அறிஞர் காதல் பற்றி பல ஆய்வுகளை நடத்தியவேளை காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

## பிள்ளையார் ட்ரேடர்ஸ்

3060 Lawrence Ave.E., Scarborough, ON.
(at Lawrence & Markham)

**Tel: (416) 438-7746**



# ALL PRO

AUTO PARTS & SERVICES

## BODY WORKS


Free Inspection

- → Transmission Oil-Engine Oil Change
- → Tune-up
- → Front End and suspension
- → Cooling System flush & Recycle
- → Brakes (parts & labour)
- → Wheel Alignment (special $30)
- → Tire Rotation
- → Exhaust System

OWNER / TECHNICIAN
**SIVA or PRASAN**

1277 (Rear) Bloor St
691 (Rear) Lansdowne Av.
Toronto
Tel: (416) 534-3771
243-1774

(416) 571-6948
(weekends)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயப்பட்ட இருவரது மன எழுச்சிகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்ற முடிபுகளைப் பெற்றார். கவர்ச்சிமயமான தன்மைக்கும் காதலுக்கும் உள்ள தொடர்புகளை இவர் விளக்கினார். சில வேளைகளில் நட்பு ரீதியில் (Friendship) எழும் காதல் பற்றி (Davis) என்ற அறிஞர் 1985இல் 250 கல்லூரி மாணவர்களிடம் ஆராய்ந்தார். உடல்ரீதியான விருப்பு அன்றி ஒருபால் ரீதியானவர்களே கூடுதலான நட்பு கொண்டிருந்ததினை முடிவு காட்டியது. எனவே எதிர்ப்பால் நட்பே காதலாக மாறும் நிலைக்கு செல்ல முடியும் என்று இவர் கருதினார்.

பாலியல் ரீதியில் காதலினை விளக்கமுயன்ற விஞ்ஞான ஆய்வுகள் உடலியல் - மனஎழுச்சி ரீதியில் எழும் தன்மை பற்றி குறிப்பிட்டதுடன் இக்காதல் வடிவம் 6 வகையான தன்மைகளை காட்டுவதாகவும் குறிப்பிடுகின்றன. அவை முறையே துணையார் (Companionship) கவனம் (Caring) நெருக்கம் (Intimacy) கற்பனைக்காதல் (Romance) பால்உணர்வு (Sex) பொறுப்புணர்வு (Commitment) ஆகும். முதலாவதாக குறிப்பிட்ட துணைரீதியாக எழும் காதல் மன எழுச்சி வாழ்வு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் தன்மையில் இருவருக்கிடையில் ஏற்படுகின்றது. பொதுவான விருப்பங்கள், பரஸ்பர விளக்கங்கள் என்பவற்றில் இது ஏற்படலாமென றோவே (Powe) என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். இத்துணை விரும்பிகள் இறுதியில் திருமணம் செய்து கொள்ளவும் கூடும் ஆனால் கட்டாய-மானதல்ல. ஆதரவு காரணமாகத் தோன்றும் காதல் பற்றி றூபின், மக்னீல் (Rubin and mcneil) ஆகிய அறிஞர்கள் 1981இல் ஆராய்ந்தனர். மற்றவர் மீது ஏற்படும் கவனம் காரணமாக இக் காதல் ஏற்படுகின்றதென்று கூறியுள்ளனர். அதேவேளையில் நெருக்கம் காரணமாக இருவர் தமது சிந்தனை உணர்வு, பயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றினைப் பகிர்வதால் ஏற்படுகின்றது. ஒருவருக்கு ஒருவர் ஒளிக்காது கூறி விடுகின்ற தன்மையால் இக்காதல் ஏற்படுகின்றது.

அடுத்து கற்பனைக் காதல் (Romance) மூலமான காதல் என்பது நெருங்கிய மறைமுகமான தன்மையில் அல்லது எதுவித காரணமுமின்றி சில வேளைகளில் குழந்தைத்தனமாகவோ அல்லது முட்டாள் தனமாகவோ உணர்ச்சி வசப்பட்டு கற்பனை ரீதியான உணர்ச்சிக்கு தள்ளப்படும் வேளையில் இது எழலாம். 'காதலுக்கு கண்ணில்லை' என்று நாம் கூறுவது போன்று இதற்கும் காரணம் கூறமுடிவதில்லை.

திடீரென்று தோன்றும் மேற்கூறிய காதல் வடிவம் பற்றி றுபென்ஸ்ரின் (Rubenstein) என்ற அறிஞர் 1983இல் ஆராய்ந்த போது 96% ஆண், பெண்கள் இதில் நம்பிக்கையும், விருப்பமும் கொண்டிருந்தனர். அவர்களுக்கு உணர்ச்சி, கவர்ச்சி, மகிழ்ச்சி என்பவை முக்கியமாக இருந்துள்ளது. பாலியல் காதல் உணர்வு என்பது பாலியல் ரீதியில் எழுகின்ற திருப்திகரமான தொடர்பு ஆகும். 1981இல் வூல்வ் (Wolfe) என்பவரது ஆய்வுப்படி உடலுறவு முறை கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. அனைவரது வாழ்விலும் அடிநாதமாக பாலியல் கொள்கையே ஏற்பட்டுள்ளது. கடமைப்பாடு என்ற காதல் நிலையில் கஷ்டமான சந்தர்ப்பங்களில் கூட விடா முயற்சியுடன் ஈடுபடும் தன்மை ஏற்படுகின்றது. மன அழுத்தம் மன முரண்பாடுகள் ஏற்பட்டாலும் இவர்களது காதல் தொடர்ந்தும் இடம்பெறும். இவ்வாறு ஆறுவகையான தன்மையில் வேறுபட்டு தோற்றமுறும் காதல் வடிவம் தொடர்ந்தும் உளவியலாளரின் ஆய்வுக்குட்பட்டு வருகின்றது.

அடுத்து காதலின் அடிப்படை பற்றி நோக்கும் போது இவ்வுணர்வு தோன்றுவதற்கு மேலைத்தேசம், கீழைத்தேசம் என்ற வேறுபாடு கிடையாது எனினும் வளர்ச்சியுறும் முறையில் சிறு மாற்றங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. உடலியல் இரசாயன கூறுகளுடன் தொடர்புடைய இவ்வுணர்ச்சி ஏற்படுதவற்கு கவர்ச்சி (Attraction) முக்கியமாக கருதப்பட்டுள்ளது. பலருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உரையாடும் போது காதலில் ஒருவர் வீழ்ந்து விட்டதாக (Falling in love) குறிப்பிடுவது மூலம் ஏதோ கிணற்றுள் விழுந்துவிட்டது போன்ற ஒருவகை தலையுணர்வுடன் வெளிப்படுத்துகின்றோம். அதாவது திடீரென்று ஏற்படும் உணர்வு அதிர்ச்சியை வெளிக்காட்டி நிற்கின்றது. ஒரு கூட்டத்தில், ஒரு விழாவில் நடை பாதையில் சந்திக்கும் இருவர் திடீரென்று ஒருவரையொருவர் காதலிக்கலாம்.

காதல் குருடானதா (Is Loev blind) என்று நோக்கும் போது உண்மையில் காதலுக்காக உயிர்துறந்துள்ளவர் பலர். தாஜ்மஹாலை தன் காதலி மும்தாஜின் நினைவுக்காக கட்டியெழுப்பிய சாஜகான் போன்று பல தியாகங்களை காதலுக்காக செய்தவர்கள் உளர். 1982இல் ஜோன்சன், லெஸ்லி (Johnson and Leslie) ஆகியோர் செய்த ஆய்வுப்படி உண்மையான காதல் தோற்றம் பெறும் விதம் பற்றி வேறுபாடான தடுமாற்றமான பதில்களை 416 பட்டதாரி மாணவர்கள் கொடுத்திருந்தனர். அதாவது காதல் பற்றி உறுதியான முடிவு அவர்களால் செய்ய முடியவில்லை என்பதனையே காட்டுகின்றது.

காதல் எழும் படிமுறை நிலைகள் (Love Stages) பற்றி டொரத்தி ரெனப் (Dorothy Tenov) என்ற அறிஞர் 1970இல் ஆராய்ந்த வேளையில் மிகவும் புதுமையான முடிவுகள் எடுக்கப்பட்டன. முதலில் தோன்றும் வியப்பு உணர்வு (Admiration) படிப்படியாக பாலியல் கவர்ச்சியாக (Sexual attraction) பின்பு ஒரு நெருப்பு (Spark) போன்று காதல் தோன்றி விடுகின்றது என்கிறார். இதனை ஆய்வு செய்த ஐரா றீஸ் (Ira Reiss) என்ற அறிஞர் காதல் வட்டம் (Love Circle) என்ற கொள்கையடிப்படையில் விளக்கி 'ஒருவர் பற்றி ஒருவர் விளங்கிக் கொண்டு உரையாடி, ஒருவரில் ஒருவர் தங்கும் நிலைவந்து, இறுதியில் ஒருவர் இன்றி ஒருவர் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர்' என்கிறார். காதலர்கள் ஒருவரையொருவர் தெரிவு செய்யும்போது எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. பொதுவான கவர்ச்சியான உடலமைபபு, மகிழ்ச்சியான தேரற்றம், சிந்தனைத்திறன் விளையாட்டுத் திறன் என்பவற்றினை அவதானித்தே காதல் எழுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. 'காதல் உள்ளம்' பல்வேறு பிரச்சனை களையும் சந்திக்கின்றன. சிலவேளைகளில் காதல் மறுப்பு (Rejection) நிகழலாம். இதனால் கோபம், மனமுறிவு ஏற்பட வாய்ப்புண்டு. இந்த சந்தர்ப்பங்களில் மீள முயற்சித்தல், பேச்சுவார்த்தையிலீடுபடுதல், பய அனுபவங்களைப் புதுப்பித்தல் போன்றவற்றினை கையாளவேண்டி ஏற்படலாம். காதலர் உலகம் இன்னோர் பிரச்சனையையும் எதிர்கொள்வதுண்டு. பொறாமையுள்ளவர்கள் சிலவேளைகளில் காதலர்களை குழப்பிவிடுவார்கள். இதனால் காதல் முறிவடைந்து விடும். பொறாமை என்பது மற்றவர் மீது எழும் வஞ்சத்தினை தீர்ப்பதற்கும் தனக்கு இப்படி காதல் கைகூடவில்லையே என்று எண்ணு பவர்களினால் ஏற்படுத்தப்படுகின்றது. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சரியான விளக்கங்களைப் பெற்றுக்கொளவது காதலர்களுக்கு இன்றியமையாதது. சில வேளைகளில் காதல் விரைவில் மங்கிப்போவதுமுண்டு. இதனால் ஒருவரை-யொருவர் விலகி செல்ல ஆரம்பிப்பர்; காதல் தொடர்பு முறிந்து விடுகிறது.

காதலில் தோல்வியடைந்தவர்கள் தற்கொலை செய்யும் சம்பவம் இன்றைய அன்றாட நிகழ்வு. ஒருவகையில் காதல் கீதமும் மறுவழியில் சோககீதமும் வாழ்வில் ஒலிக்கின்றன. பெரியோர் விருப்பமின்மை, புதிய காதல் உறவு, பரஸ்பர நம்பிக்கையின்மை போன்றவற்றால் மாறிச் செல்கின்றன. காதல் தடம்புரளும் வேளையில் நிதானமாக நடந்து கொள்வது புத்திசாலித்தனமானது. தெய்வீகக் காதல், மாறாத காதல் என்றெல்லாம் பொருள்படும் இவ்வுணர்வு பற்றிய எண்ணத்தில் வாழ்ந்து வருபவர்களும் பலர் உளர். தொகுத்து நோக்கின் உடல், மன உணர்வு அலைகளை மீட்டிக் கொண்டிருக்கும் காதல் தொடர்ந்தும் புதிய தளிர்களை வெளிவிடவே செய்யும்.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயமெனும் பறவைக்கூட்டில்

*தமிழீழத்திலிருந்து....*
~ பல்லவன்



இடரடைந்தோம்
இன்னலடைந்த உள்ளமானோம்
இன்னும் என்ன வாழ்வு என்று
உணர்வோடு
உலாவுகிறோம்
வாழ்வினிலே பாதி இன்பம்
மீதிதான் துன்பம் என்றார்கள்
எம் வாழ்வே இங்கு துன்பம்
நெஞ்சக் குட்டையில் சோக ஓலம்
பிஞ்சு மனங்களில் பீதியின் உச்சம்
இளமை தான்
இனிமை என்றனர் இங்குபார்த்தால்
இளமைகளெல்லாம்
தனிமையிலிருந்து
பயமெனும் பறவைக்கூட்டில்
அடைக்கப்பட்டவராய் நித்தமும்
அல்லலுறுகின்றனர்.
நாளை என்ன வாழ்வு என்று
நாம் பகிர முடியாத
கோழைகளாய் வாழ்கிறோம்
கோட்டை போல் விழுங்கிய வீடு
கோழிக் கூட்டுடன் இணைந்த
பங்களாக்கள்
எல்லாம் தொலைந்தன இப்போ
மூட்டை முடிச்சாய் நம் வாழ்வு
நடுத்தெருவில்
நர்த்தன மாடுகிறது.
செருப்பாலடித்துவிட்டு
பாலால் கழுவுவது போல்
சொல்லொணா துன்பம் கொடுத்தபின்
நிவாரணம் தருவர்
மரணம் என்பதால் தப்புவதற்கு.
தயரினை கவியில் புனைய
எண்ணினால்
பயத்தினால் வடியும் கண்ணீர்
கவிதையை வருடி வளர்க்காமல்
கால் வாருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

விளம்பரம் என்ற பத்திரிகையை ஒன்ராறியோவில் அறியாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்.



ராஜா எம். மகேந்திரன்

மிகவும் அடக்கமாக- நுகர்வோருக்கு பயன்தரக்கூடிய முறையில் இப்பத்திரிகை மக்களை அடைகின்றது.

ஒவ்வொரு மாதமும் 1ம் திகதியும் 15ம் திகதியும் வெளியாகும் இவ்விளம்பரம் பத்திரிகை மக்கள் செல்வாக்கைப் பெற்றுள்ளது.

1991ம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை தங்கு தடையின்றி தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

இப்பத்திரிகையின் வெற்றிக்கு மிகவும் உதவியவர் 'றிப்ளக்ஸ்' அச்சக ஜோர்ஜ் இதயராஜ் அவர்கள்.

கனடாவில் எத்தனையோ பத்திரிகைகள் சில வாரங்கள் வெளிவராமலே இருந்திருக்கின்றன. ஆனால் வரவேண்டிய திகதியிலிருந்து தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பாராட்டைப் பெற்றுக் கொள்கின்றது. தவறாமல் வெளிவரும் பத்திரிகை 'விளம்பரம்' என்பதில் விளம்பரம் நிர்வாகிகள் பெருமை கொள்ளவேண்டும்.

விளம்பரத்தை வெளியிடுபவர் ராஜா எம். மகேந்திரனாகும். இவர் ஒரு பொறியியலாளர். சாந்தமான குணமும், பழகுவதற்கும் இனியவர். எடுக்கும் காரியத்தை வெற்றியாக முடிக்கும் திறமை வாய்ந்தவர்.

விளம்பரப் பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது என்ற கேள்வியை அவரிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு பதில் தருகின்றார்.

"நான் இப்பத்திரிகையை ஆரம்பித்த கால கட்டத்தில் எம்மவர்கள் பல விடயங்களைத் தெரியாமல் கஸ்டப்படுவதை கண்டேன். பலருக்கு பல தேவைகள் இருந்திருக்கின்றன. அவர்கள் கஸ்டப்பட்டார்கள். அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதனாலேயே ஆரம்பித்தேன். மக்களுக்கு வேண்டிய விளம்பரங்களை எனது பத்திரிகை நிறைவு செய்கின்றது என நம்புகின்றேன். மக்களினதும் விளம்பரதாரர்களினதும் ஆதரவு 'விளம்பர'த்திற்கு நிறையவே உள்ளது".

விளம்பரம் தொடர்ந்து வீறு நடைபோடட்டும்
வாழ்க விளம்பரம்
வளர்க மகேந்திரன் பணி!

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனாக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி



~ தமிழருவி சந்திரமோகன்

இன்று தமிழகத்தின் அரியாசனத்தை அலங்கரிக்கின்றார் கலைஞர்.

தமிழ் நாட்டிலும் உலகில் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் கடந்த நாற்பதாண்டு காலமாக உச்சரிக்கப்படும் புகழ்பெற்ற பெயர் கலைஞர் மு. கருணாநிதி என்பாகும்.

தி.மு.க என்னும் அரசியல் கட்சியில் மூன்றில் இரண்டு பங்காய்த் திகழ்பவர் கலைஞர்.

அறிஞர்க்கு அறிஞர், கவிஞர்க்கு கவிஞர், தலைவர்க்குத் தலைவர், எளியவர்க்கு எளியவர், நண்பர்க்கு நண்பர், மற்றார்க்கு இனியவர், இந்தியக் குடியரசின் சிறந்த மாநில நிர்வாகி எனப் பாராட்டப்படுபவர் கலைஞர். மு. கருணாநிதி.

தமிழக முதல்வராக கலைஞர் வெற்றி பெற்றதை எண்ணி உலகம் பூராவும் வாழும் தமிழர்கள் மகிழ்வால் குதூகலிக்கின்றார்கள். கலைஞர் தமிழர்களின் பாதுகாவலன்.

கலைஞரை தமிழக முதல்வர் என்று கூறுவது தவறு. அவர் உலகத் தமிழர்களுக்கே முதல்வர்.

அவரது வளர்ச்சி இன்று உச்ச நிலையிலுள்ளது.

எழுத்தாளனாக- பேச்சாளனாக, திரைப்பட வசனகர்த்தாவாக, பத்திரிகைத் துறையின் முன்னோடியாக முத்திரைகளைப் பதித்துள்ள கலைஞர். மு. கருணாநிதி உயர்ந்த மனிதன் என்று எல்லோராலுமே கணிக்கப்படுகின்றார்.

அவரது சிறுவயது வாழ்க்கை மிகவும் சுவாரசியமானது.

முதல்வர் கருணாநிதி தஞ்சை மண்ணில் திருவாரூர் பகுதியின் திருக்குவளைக் கிராமத்தில் 1924ம் ஆண்டு ஜூன் மாதம் 3ம் திகதி செவ்வாய்க்கிழமை பிறந்தார். தந்தை முத்துவேலர் - அன்னை அஞ்சுகம். அக்காமார் இருவர்.

இளம் பருவத்தில் திண்ணைகளிலும் பாழடைந்த கோயில்களிலும் நண்பர்களைக் கூட்டிக்கொண்டு தேன்குழல் சாப்பிட்டுக்கொண்டு இருப்பது கருணாநிதியின் வழக்கம். தனியாக கருணாநிதியை யாரும் பார்க்க முடியாது. எப்போதும் நண்பர் குழாம்தான். துருதுருவென்று இருந்ததோடு வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசும் துடுக்குத் தனமும் அவரிடம் நிரம்பியிருந்தது. பெரியவர்களிடம் மரியாதை காட்டும் பண்பும், அன்புடன் பழகும் இயல்பும் இருந்தாலும், குற்றம் கண்ட இடத்து அவர் எவராயினும் கண்டிக்கும் தன்மையும் அப்போதே படிந்திருந்தது.

சமுதாயக் கொடுமைகளும், ஆண்டான் அடிமை என்ற பாகுபாடும் சாதிசமய ஏற்றத்தாழ்வும் அவருக்கு வெறுப்பையும் சலிப்பையும் ஏற்படுத்தின. இவையே எதிர்காலத்தில் கலைஞரை சாதி சமுதாயக் கொடுமைகளை எதிர்ப்பதில் முன்னணி வகிக்க வைத்தன.

பள்ளித் தேர்வுகள் முடிந்து விடுமுறை விட்டதென்றால் கருணாநிதிக்கும் நண்பர்களுக்கும் கொண்டாட்டம்தான். ஆனால் வீட்டிலிருப்பவர்கள் பாடு திண்டாட்டம். ஏனெனில் மாட்டுத் தொழுவம் நாடக மேடையாக மாற்றப்படும். போர்வைகள் திரைச்சீலைகளாக மாறும். கூத்துக்கள் நிகழ்த்தப்பெறும். மற்றப் புராண கதா-நாயகர்களைவிட கருணாநிதிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்த வேடம் அர்ச்சுனனும் கிருஷ்ணனும்தான். தவறு காணுமிடத்திற்கெல்லாம் வெகுண்டெழுந்து தண்டிக்கும் மனப்பண்பு இக்கதாபாத்திரத்தில் இருந்ததுதான் காரணம் என ஊகிக்க இடமிருக்கின்றது.

அவர் பயின்ற பாடசாலையில் உயர்சாதி மாணவர்களுக்கென்று தனிப்பானையில் தண்ணீரும், பிற்பட்ட மாணவர்களுக்கென்று இன்னொரு பானையும் இருக்கும். பிற்பட்ட சாதியைச் சேர்ந்த கருணாநிதி அந்தப் பானைத் தண்ணீரை "ஏன் குடிக்கக் கூடாது" என்று கூறி வேண்டுமென்றே குடித்து வம்புக்கு இழுப்பதும் உண்டு. இந்த மாதிரிச் சமயங்களில் ஆசிரியர்கள் அவரை சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. அவர்களது சமாதான மொழிகளில் கருணாநிதி சாந்தமடையவில்லை. நெஞ்சிலே அந்த எண்ணம் கனலாகவே நின்றது.

கருணாநிதி மேற்படிப்புக்காக திருவாரூர் பாடசாலையொன்றில் சேர்ந்தார். பள்ளிக்கூடம் சேர்ந்த நாள்முதல் தவறாமல் ஒழுங்காகப் பாடசாலை வந்த மாணவர்களுள் ஒருவன். பள்ளிப்பாடங்களை விடக் கவனம் வேறு நிலைகளில் திசைதிருப்பப்பட்டு கையெழுத்துப் பிரதி நடத்துவதில் ஈர்க்கப்பட்டிருந்தான். மாணவர்கள் பலரையும் சேர்த்துக்கொண்டு மாணவர்களின் பிரதிநிதியாகக் குரல் கொடுப்பான். அவனது அழகிய முகத்தில் காதணி அலங்காரமாக இருக்கும். நேர்வகிடுடன் அலையலையாக முடி சுருண்டு முகத்தில் விழும். ஒல்லியான உடல்வாகு எப்போதும் சிரித்த முகம், இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் சுட்டித்தனமான பேச்சு அவனுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பறைசாற்றும்" என்று அப்பாடசாலை ஆசிரியர் நினைவு கூருகின்றார்.

இவ்வாறு சிறுவயதிலேயே கருணாநிதி ஒருவித்தியாசமான போக்குடையவராகவே காணப்பட்டார்.

சிறுவர் சீர்திருத்தச் சங்கம் பெரும் புகழ் பெற்றது.

தந்தை ஈ.வே.ரா பெரியாரின் கொள்கைகளில் மனதைப் பறிகொடுத்த கருணாநிதி, திராவிடர் கழகத்தில் சேர்ந்து இயங்கினார்.

தொடர்ந்து பெரியாருடன் ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாக திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து அண்ணாதுரையுடன் சேர்ந்து தி.மு.க.வைத் தோற்றுவித்தார்.

தி.மு.க.வின் அடிமட்டத்தொண்டனாக இருந்த கருணாநிதி இன்று இந்த உச்ச நிலையை அடைந்ததற்கு அவரது விடா முயற்யும், கொள்கைப்பற்றும், திறமையுமே காரணங்களாகின்றன!

கருணாநிதி தமிழித்தின் முதல்வராகி விட்டார் என அறிந்து ஸ்ரீலங்கா அரசு நடுங்குகின்றது!

கருணாநிதி 'தமிழீழத் தமிழர்களாகக் குரல் கொடுப்பார்' என்று ஈழத்தமிழர்கள் முழுமையான நம்பிக்கையில் உள்ளார்கள்.

பொறுத்திருந்து பார்ப்போமே!

******

நம்நாடு
NAMNAADHU
தொடர்புகளுக்கு:
Tel/Fax: (416) 926-0629
Tel: (416) 516-0241
Fax: (416) 536-2349



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராத்தே
## SHOTOKAN

"சீற்றம் அயர்வகற்று மையம்" (CEYTUM RECREATION CENTRE) என்ற இந்த ஸ்தாபனம் கனடாவில் சில வருடங்களாக இங்கு வாழ் இளந் தலைமுறையினருக்கு சிறப்பாகத் தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்து வருகின்றது.

'தற்காப்பு' என்பதை இன்று ஒரு கலையாகவே மாறிவிட்டது ஜப்பானிய கராத்தே.

ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் 'ஷொட்டோக்கான்' கராத்தே முறையில் தற்காப்புக் கலையை நீண்ட காலமாகச் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவித்து வரும் சீற்றம் அயர்வகற்று மையமும், அதன் பிரதான இயக்குநர் பிரதிப் இராஜரத்தினமும் தமிழ் மக்களினது ஏகோபித்த பராட்டுக்குரியவர்கள்.

இந்நிலையம் இன்று கனடாவில் 3150 Eglinton Ave., # 6, ஸ்காபரோவில் இயங்கி வருகின்றது. தொலைபேசி இலக்கம் (416) 265-5085 என்பதாகும்.

நிலைய இயக்குநர் பிரதிப் மிகவும் அவதானமாக தன் பணியை செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது. பயிலுனர்கள் மகிழ்வாக தமது பயிற்சியைப் பெற்று வருகின்றார்கள். பிரதிப் நல்லவர். வல்லவர். தற்போது பல இளைஞர்கள், யுவதிகள் இந்நிலையத்தில் இணைந்து பயிற்சி பெற்று வருகிறார்கள்.

'கராத்தே' என்றால் 'வெறும்கை' என்று பொருள்படும். அதாவது எதுவித ஆயுதமும் தரிக்காமல் தன்னைத்தானே பாதுகாக்கும் தற்காப்பு கலையாகும்.

கராத்தே தோற்றம் பற்றிப் பார்க்கும்போது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் அவர்களின் மத்தியில் இக்கலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து பின்னர் படிப்படியாக ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது. இந்த வகையில் 'ஆரம்பஸ்தானம்' இந்தியாதான் என்பதற்குப் பல சான்றுகளும் உள்ளன.

இந்தியாவிலிருந்தே 'கராத்தே' சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் பரவின என்பது வரலாறு.

மதிக்கும் பண்புகெட்ட நடத்தைகளை, தவிர்த்தல், பிரச்சனைகளை தவிர்த்தல் போன்ற அனைத்திற்கும் கராத்தே பயிற்சி முறைகள் வித்தாக அமைகின்றன. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பார்கள்.

எனவே ஐந்தில் வளைத்து விட்டால் ஐம்பதைப் பற்றில் கவலைப்படவே தேவையில்லை.

இது தவிர கராத்தே பயிற்சிக் கூடங்களும் பலதரப்பட்ட பியிற்சியாளர்களும் அங்கு வருவதனால், அங்கு இன, மத, மொழி வேறுபாடுகள் இல்லாமல் போவதுடன் படிப்போ அல்லது பணமோ அல்லது வேறு காரணிகளோ இக்கலையை பயிலுவதற்கு இடையூறோ அல்லது பராபட்சமோ காட்டப்படுவதில்லை.

இதன் மூலம் பல பேரின் தொடர்புகள் ஏற்படுவதுடன் ஒருவருக்கொருவர் பரஸ்பர நண்பர்களாகவும் கருத்துக்களைப் பரிமாறவும் ஏற்ற ஒரு நல்ல இடமாகவும் அமைய இக்கலை வித்திடுகின்றது.

கராத்தே பயிலுவதன் மூலம் பல போட்டிகளில் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பம் அனைவருக்கும் கிடைப்பதுடன் தனிப்பட்ட தனது திறமையை வெளிப்படுத்தும் ஒரு களமாக இப்போட்டி நிகழ்ச்சிகள் அமைவதுடன் பயிற்சியாளர்களை ஊக்குவிக்கின்ற ஒரு ஊக்குவிப்பு மாத்திரையாகவும் இப்போட்டிகள் அமைகின்றன. சென்ற இந்த வருடத்தில்கூட ஒன்ராறியோ மாகாண ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் Ceytum shotoken Karate மாணவர்கள் பங்குபற்றி பல பதக்கங்களைப் பெற்றதை அனைவரும் அறிவர். இதைவிட ஏனைய பல கழகங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளிலும் கூட மாணவர்கள் பலதரப்பட்ட பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள் என நிர்வாகி தெரியப்படுத்துகின்றார்.

இவை யாவற்றுக்கும் மூல காரணமாக அமைந்தது, கராத்தே பயிற்சி முறையே. இன்று ஜப்பானிய பள்ளிக்கூடங்களில் இருந்து பல்கலைக்கழங்கள் வரை Shotoken Karate பாடத்திட்டமாக அமையுமளவிற்கு மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது.

வெகு விரைவில் கனடாவிலும் குறிப்பாக ஒன்ராறியோ மகாணத்திலும் கராத்தே பயிற்சி முறைகள் பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழங்கள் வரை பாடத்திட்டமாக வரவுள்ளன.

இதிலிருந்து எவ்வளவு தூரம் கராத்தே பயிற்சி முறைகள் உலகெங்கும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன என்பதை உணரமுடிகின்றது.

இன்று கனடாவில் தமிழர்கள் மத்தியில் Shotoken கராத்தே மிகவும் பிரபல்யமடைந்து வருகின்றது. இது தேக ஆரோக்கியத்திற்கு உரிய உடல் ரீதியான கலையாகவும், தற்பாதுகாப்புக் கலையாகவும் விளையாட்டாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றது. தசைநார்கள், மூட்டுகள் என்பவற்றை வளர்ச்சியடையச் செய்வதுடன் ஆண்கள் மட்டுமன்றி பெண்கள், சிறுவர் சிறுமியர் பெரியவர்கள் இடத்திலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

எம்மவர்கள் பலரின் மத்தியில் 'கராத்தே' என்பது தனியே சண்டை போடுவதற்கான ஒரு கலை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பபிப்பிராயம் உண்டு. இது நூற்றுக்கு நூறு தவறு.

கராத்தே பயிலும் ஒருவர் தன்னடக்கம், நன்னடத்தை, நேர்மை, மரியாதை, முயற்சி, நற்குணம் என்கின்ற பண்புகளைக் கொண்டு விளங்குவதுடன், நல்ல பொறுமைசாலியாகவும் இருப்பது அவசியம்.

எவர் ஒருவர் மேற் கூறப்பட்ட தகுதிகளை இழக்கின்றாரோ அவர் இக்கலையை பயிலுவதற்கு உரிய தகுதியை இழப்பதுடன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவராகவும் கருதப்படுகின்றார். பலபேர் இதனை சரியான முறையில் பாவிக்காமல் மூட்டுக்கள், இடுப்பு, முழங்கால், கணுக்கால், முழங்கை மற்றும் ஏனைய உடற்பகுதிகளில் காயங்களையுமன் நோவுகளையும் ஏற்படுத்தி அல்லலுறுவதுடன் தொடர்ந்து பயில முடியதவராகவும் உள்ளனர்.

இதற்கெல்லாம் காரணம் சரியான முறையில் உடற்பயிற்சிகளை செய்யாததும் செய்முறைகளை சரியான முறையில் விளங்கிக் கொள்ளாத தன்மையுமே ஆகும். அதைவிட முக்கியம் நல்ல ஆசிரியரைத் தேர்ந்தெடுப்பதாகும்.

நல்ல ஆசான் இல்லாத எந்தக்கலையும் நல்ல முறையில் பயில முடியாது. இந்த வகையிலே குரு அதாவது Ceytum . Shotoken Karate ஆசிரியர் அவர்கள் இக்கலையில் நிறைந்த அனுபவமும், பயிற்றுவிக்கும் தேற்சியும், திறமையும் பெற்றிருப்பதுடன் நல்ல ஒழுக்கத்தையும், தன்னடக்கத்தையும் தன்னகத்தே கொண்டவராக விளங்குவது பெருமை தரக்கூடியது. இவரது கலைப்பணி வளர வாழ்த்துகின்றோம்.

★★★★★

★★★★★★★★★

# நாமமது தமிழர்

~ டாக்டர். விக்டர் ஜே. பிகராடோ
குடும்ப வைத்தியர்

தேமதுரத் தமிழருக்கோ
தேறுதலுக்கிடமில்லை
நாமமது தமிழரெனில்
நாடுமில்லை ஊருமில்லை
பாவமெது நாம் புரிந்தோம்
பாரினிலே தமிழருக்குச்
சாபமெதும் வீழ்ந்ததுவோ
சற்றே நான் சிந்தித்தேன்.

சீதனந்தான் வாங்குகின்ற
சின்னத் தனமுன்னோர்
பாதகந்தான் சிங்களவர்
பண்ணுகின்றார் என்று சொல்லிக்
காததூரம் கடந்திங்கு
கனடாவில் வந்த பின்பும்
ஆதனங்கள் கேட்கின்றார்
அவர் மீது பிடி சாபம்

கன்னியர்கள் எம்மினத்தில்
கண்ணீரைச் சிந்தவைத்துப்
பொன்னின்றிப் பொருளின்றிப்
பொருள்தாதிம் மணமென்போர்
இன்றுந்தான் வாழ்கின்றார்
இவரிங்கு வாழுமட்டும்
என்னென்று எமைநீங்கும்
எம்மைத்தான் பிடிசாபம்.

★★★★★

★★★★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்தாயி முத்தா

~ தமிழருவி சந்திரமோகன்

இந்திய - கனடிய கலைஞர்களைக் கொண்டு கனடாவில் வேகமாக வளர்ந்து வருகின்றது. 'முந்தாயி முத்தா' என்ற தமிழ்த் திரைப்படம்.

மன்சூர் அலிகான், வஜந்தி ஆகியோர் முக்கிய பாத்திரமேற்று நடித்து வருகின்றார்கள். மற்றும் நெப்போலியன், செந்தில், கவுண்டமணி போன்ற இந்திய கலைஞர்களும் நடிப்பார்கள் என அறிந்து கொள்ள முடிந்தது.

கனடா கலைஞர்கள் ஜோர்ஜ் இதயராஜ், ஜீவன்ராம், கேதீஸ், கவிதா, சிவாசின்னத்தம்பி, ராஜ்குமார், தீசன், கிருஷ்ணா, ரவி ஆகியோர் தங்கள் பங்களிப்பை அளித்து வருகின்றார்கள்.

இது ஒரு கிராமிய, சமூக, மேற்கத்திய தலைப்புக்கதை.

ஆங்கில திரைப்பட விற்பனனர்களும் இப்படத்தின் இயக்கத்திற்கு முன்னோடியாக செயற்படுகின்றார்கள்.

இப்படம் 'Film Festival'க்குப் போவதற்குத் தகுதி படைத்ததான கதையம்சம் கொண்ட ஒரு நவீன தயாரிப்பாகும்.

எதிர்வரும் தீபாவளியுடன் இப்படம் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படம் இந்தியா, இலங்கை மற்றும் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் உலகளாவிய ரீதியில் திரையிடப்படும்.

இந்தியா - கனடிய கூட்டுத் தயாரிப்பில் வெளியாகும் முதலாவது படம் என சிவாசின்னத்தம்பி தெரிவிக்கின்றார்.

இதைத் தொடர்ந்து பல வெற்றித் தயாரிப்புக்களை வழங்க பல நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக நம்பப்படுகின்றது.

இப்படம் "G. J. Productions" தயாரிப்பில் பிரமாண்டமான முறையில் தயாராகி வருகின்றது.

இதன் பாடல், இசையமைப்பை பல முன்னணி வாய்ந்த இந்தியக் கலைஞர்கள் பொறுப்பேற்றுள்ளதாக அறியப்படுகின்றது.

வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களினால் இந்திய தமிழ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சினிமாத்துறைக்கு ஊக்கமளிப்பதும் ஒப்பற்ற பொருளாதார சேர்க்கையும் ஏற்படுகின்றது என்பது யாவரும் அறிந்ததே. அதே துறையில் தமிழீழ கலைஞர்களும் கால்பதித்து மறைந்திருக்கும் தமது அபாரத் திறமைகளை வெளிக்கொணரவும், இப்படம் நல்ல ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. இது எமது சமூகத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும்.



இப்படத்தின் நிழற் படங்களை 'Jupiter Photo Ltd' கவனித்து வருகின்றது. மிகவும் திறமைவாய்ந்த நவம் அவர்கள் இப்படத்தின் மூலம் தன் முத்திரையையும் பதித்துக் கொள்வார்.

மேலும் தொடர்ந்து பல சினிமாப்படங்கள் வெளிவந்து தமிழீழத்தின் முத்திரையைப் பதிப்பார்கள் என நம்பலாம்.

★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அறிமுகம்

இலங்கையின் மனங்கவரும் மலையகத்தில்.... அந்த.. குளிர்ச்சியான சொர்க்க பூமியில் என் ஜனனம் இடம்பெற்ற போதும்... என் மனம் இன்றுவரை கொதித்துக்கொண்டுதான் உள்ளது.....!

எதிலும்... ஊன்றிக்கொள்ளமுடியவில்லை...... எதிலும் மனதை நிலைநிறுத்த முடியவில்லை. வேதனைகள் என்பது வாழ்க்கையில் அத்தியாயம்... எனது வாழ்க்கையில் இதுதான் அத்திவாரம். தலையெழுத்து என்று குற்றம் சுமத்தி விட்டு சும்மா இருக்க முடியவில்லை.....

எனினும் என் ஜடமாகிய இந்த உடலில் இன்றுவரை உயிர் இருந்து சில மாதங்களின்.... ஸ்நேகிதங்களால் மட்டுமே....!

~ எஸ். வைதேகி

### காதல் உணர்வு

காதல் உணர்வு ஒரு மனிதனின் வாழ்க்கையை மெருகூட்டும்.... அமைதிப்படுத்தும் ஒரு வானவில். இந்த வானவில் ஒரு தற்காலிகம். இது... மனிதனை தேவனாக்குவது மட்டுமல்ல..... மிருகமாக்குவதும் கூட.....

என்ரசனையில் ஒரு கவிதை. ஒரு நாயகன் தன் நாயகியை.... மனதில் நினைத்து.... அவள் தன்னுடன் இணையமாட்டாள் என்று தெரிந்தும்.... அவளை மனப்பூர்வமாக.... நேசிக்கிறான்.

## வேதனைப் புரட்சி

ரசித்த கவிதை

இது ஓர் வேதனைப் புரட்சி
உன் இதயத்தில்.....
இடம் பிடிக்க ஆசைப்பட்ட எனக்கு
இது.... ஆயுள் தண்டனை....!
மனதில்பட்ட - சிதறல்களை
வருடிக்குப்பார்க்கும் போது......
இதமாக இருக்கிறது....!
அதன் இரகசியம்
உன்னை நேசிப்பதுதான்
எனக்குத் தெரியும்
நீ... வரமாட்டாய்.......
இது.....
தூரத் தூர போகிற
ஒரு துருவ நட்சத்திரத்தை
தூரத்தில் பிடிக்க நினைக்கும்
சிறுபிள்ளைத் தனம்....!
சிதறிப்போன......
கண்ணாடித்துண்டுகளை சேர்த்து
முகம்பார்க்க துடிக்கும்
முட்டாள் தனம்......!

# எழுத்தாளர் அரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசித்த பொன்மொழி

புத்தகத்தில் மட்டும் கல்வியை கற்காதீர்கள். ஒவ்வொரு மனிதர்களிலும் படித்து அறிந்து கொள்ளுங்கள். சமுதாய வாழ்வில் சரியான வெற்றிபெற இதுவே சரியான வழி. என்னெங்கிறீங்களா.....? மனிதனும் குழப்பங்கள் நிறைந்த புத்தகம் தானே?!

# என் ப்ரிய.... மலையக சிறார்கள்


காலம் வந்து கைகொடுக்குமென்று.....
காத்து நிற்கும் அந்த அடிமைச் சிறார்களுக்கு
கலைந்திடாத பாசப்பிணைப்புகள் என்றைக்கும்
கனவினில் கூட கிடைப்பதில்லை....!



பணத்திற்கு உயிர்கொடுக்கும் பாரினிலே
பாவம்.... இந்த.... அடிமைச் சிறார்கள்....
உணர்வுகள் ஒடுக்கப்பட்டு.... அமுக்கப்பட்டு
உள்ளம்.... சித்திரவதைகளால் எரிக்கப்படுகிறது....!

சமுதாய விழிப்பில் அக்கறை எடுப்போர்
சாவினது விளிம்பில் தத்தளிக்கும் - அந்த
அடிமைச் சிறார்களின் விடிவுக்காக
ஆற்றாது.... உடன் செயற்படவேண்டும்.....!

சண்முகம் வைதேகி
பண்டாரவளை


பிரதான இணைப்பு இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| திருமணசேவை | 0000 | |
| விளம்பர அகராதி | 1111 | ➡ 'எல். கிரிஷோத் ரைப்செட்டிங்' - 7903 |
| ஆலயம் | 2222 | |
| நகர்வலம் | 3333 | |
| சினிமா | 4444 | |
| மீடியா | 5555 | ➡ 'ரோஜா' - 5569 |
| மலிவு விற்பனை | 6666 | |
| புதிய குடிவரவாளர்கள் | 7777 | |
| உலகவலம் | 8888 | |
| ஆதவன் பப்ளிக்கேஷன்ஸ் | 9999 | |

ஆதவன் பப்ளிக்கேஷன்ஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INDEPENDENCE DAY

மோகன்: ஹலோ! ஹலோ!

ரம்யா: ஹாய் மோகன்! அப்பா.... இப்போதாவது அகப்பட்டீரா. என்ன இரண்டு நாட்களாக ஆளையே காணவில்லை. நான் Zooவில் போய்த் தேடாத குறை.

## சிந்தியா

மோகன்: ஆ...., சொன்னால் கோவிக்காதையும்.... நேற்று ஒரு படம் பார்த்தன் Independence day என்று சொல்லி.

ரம்யா: You donk. எப்பவும் என்னை விட்டிட்டுத் தான் போறது. பிறகு கதையைச் சொல்லுறது. சரி சரி படத்தைப் பற்றிச் சொல்லும்...



மோகன்: இது Independence day என்று சொல்லி ஏறக்குறைய Science Fiction மாதிரி. ஒரே த்ரில் என்று சொல்லலாம். ஏகப்பட்ட பணத்தைக் கொட்டி இந்தப் பி...ர....மா....ண்டத்தை எடுத்து முடித்திருக்கிறார்கள்.

ரம்யா: என்ன மாதிரிக் கதை. அதைச் சொல்லும்....

மோகன்: வேறு உலகத்திலிருந்து வரும் ஏலியன்கள் பூமியைத் திடீரென ஆக்கிரமிக்கிறார்கள். அவர்களுடைய விண்கலங்கள் உலகின் பல பகுதியிலுமுள்ள நகரங்களின்மேல் தரித்து நிற்கின்றன. ஒரு விண்கலம் New York நகரத்தின் பதினைந்து மடங்காக இருக்கலாம். அமெரிக்காவில் அந்த விண்கலத்தை சமாதானமாக வரவேற்புச் செய்யச் சென்ற ஹெலிக்கொப்ரர்கள் அழிக்கப்படுகின்றன. இதைத் தொடர்ந்து இந்த விண்கலங்களை அழிக்க அமெரிக்கா எடுத்த முயற்சி தோல்வியில் முடிகிறது. பின்னர் Jef Goldblum (David) அமெரிக்க ஜனாதிபதியைச் (Bill Pullman) சந்தித்து ஏலியன்களின் தாக்குதல்களை சமாளிப்பது பற்றி ஆராய்கிறார். அணுவாயுதங்கள் மூலம் விண்கலங்களை அழிக்கும் திட்டமும் தோல்வியில் முடிகிறது. பின்னர் சில ஆண்டுகளுக்கு முன்னர் கைப்பற்றப்பட்ட இதே வகையான ஒரு விண்கலத்தில் Captan Steve Hiller (Will Smith) உம் David உம் ஏலியன்களின் தாய்க்கலத்திற்குச் சென்று கணனி வைரஸ் ஒன்றை அவர்களது Computer Network இனுள் செலுத்துகிறார்கள். தொடர்ந்து ஏலியன்களது கணனி அமைப்பு செயலிழந்திருக்கும் சிலநிமிட நேரங்களில் உலகம் முழுவதிலுமுள்ள அவர்களது சகல கலங்களையும் தாக்கி அழிக்கின்றார்கள் இதுதான் கதை.



ரம்யா: வாவ்! ஏலியன்கள்!..... பூமி!......... ஆக்கிரமிப்பு!........ அற்புதம். யார் யார் நடிக்கிறார்கள்....

மோகன்: Will Smith இராணுவ Captan ஆக நடிக்கிறார். இவர் NBC தொலைக்காட்சியில் 'The Fresh Prince of Bel Air' தொடர்மூலம் புகழ்பெற்றவர். 1988ம் ஆண்டு Best Rap Performance இற்கான Grammy விருதைப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏலியன் விண்கலம் ஒன்றை ஏட்டு வீழ்த்திய பின்னர் ஏலியனைத் தாக்கி இழுத்துவரும் காட்சியில் அற்புதமாய் நடிக்கிறார். Jef Goldblum கணனியியல் நிபுணராக வருகிறார். இவர் ஏற்கனவே 'Jurassic Park' திரைப்படம் மூலம் புகழ்பெற்றவர். Bill Pullman ஜனாதிபதியாக வருகிறார். சிலகாலத்திற்கு முன்னர் வெளிவந்த 'Casper' திரைப்படத்தில் நடித்திருந்தவர். Mary Medonnell, Marilyn ஆக நடிக்கிறார். ஏற்கனவே இரண்டு தடவை Oscar விருதுக்கு போட்டியிட்டவர்.

ரம்யா: Will Smithஐ தொலைக்காட்சியில் அடிக்கடி பார்த்து சிரித்திருக்கின்றேன். தயாரிப்பு?.... டைரக்ஷன்....

மோகன்: Roland Emmerich இயக்குகிறார். இவர் ஏற்கனவே 'Stargate' என்ற படத்தை இயக்கியிருந்தார்..... Stargateஇல் என்னைமாதிரி ஒருவர் நடித்திருப்பார். Kurt Russell என்று சொல்லி!....... என்ன நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன் நீர் Steffi Graf மாதிரி ஒரு உணர்ச்சியுமில்லாமல் கேட்டுக்கொண்டிருக்கிறீர்.

ரம்யா: Thanks! என்னை Steffi Graf என்று சொன்னதற்கு. அவர் 7வது விம்பிள்டன் வென்றது தெரியும் தானே....

மோகன்: நினைப்புத்தான்; சரி சரி Karl Walter கமராவை இயக்கியிருக்கிறார். இவர் ஏற்கனவே 'Stargate' 'Universal Soldier' போன்ற படங்களை எடுத்திருந்தவர்.

ரம்யா: வேறு என்ன Special?....

மோகன்: ஏலியன் விண்கலங்கள் அமெரிக்க நகரங்களை அழிக்கும் காட்சி அற்புதம். வெள்ளைமாளிகை உட்பட அமெரிக்காவின் பல்வேறு கட்டடங்கள் தூள்தூளாகிப் பறக்கின்றன. கம்பியூட்டர் Animation மூலம் ஏராளமான காட்சிகளை அமைத்திருக்கிறார்கள். ஏலியன்களுக்குப் பயந்து மக்கள் திக்குத்தெரியாமல் ஓடும் காட்சி நம்நாட்டை நினைவு படுத்துகிறது. கைப்பற்றப்பட்ட ஏலியனுடைய உடையை வெட்டி பரிசோதிக்க முயற்சிக்கும்போது ஏலியன் திடீரென எழும்பும் காட்சி; நித்திரையில் கண்விழிக்க திடீரென நீர் முன்னால் நின்றதுபோல....... திக்கென்று இருந்தது. மிகவும் பயப்படுத்தும் காட்சி.

ரம்யா: ஹே.....ய்....!

மோகன்: சாரி........டா! இறுதியாகத் தாக்குதலுக்கு சகலரும் செல்லும்போது அமெரிக்க ஜனாதிபதியும் செல்வது சற்று இடிக்கிறது. மற்றபடி சூப்பர்! SDDS (sony dynamic digital sound) & THX உடன் பார்க்கும்போது அற்புதம். வெளியிடப்பட்ட முதல் வாரமே ஆகக் கூடுதலான வருமானத்தை பெற்ற திரைப்படம் என்ற சாதனையை இத்திரைப்படம் நிலைநாட்டியிருக்கு........

ரம்யா: சரி அப்போ நாங்கள் எப்ப போவம்?.

மோகன்: நான் Demi Mooreஇன் 'Striptease' பார்க்கவேண்டும். வாறீரா......

ரம்யா: சரிடா..., அப்பா வருகிறார். I'll see ya......

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் 1996

விளையாட்டு உலகில் பல மில்லியன் ரசிகர்களைக் கவர்ந்து, கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக முதல் நிலையில் இருப்பது ஒலிம்பிக் போட்டியாகும். உதைபந்தாட்டம் கிரிக்கட் போன்ற விளையாட்டுக்கள் குழுக்களிடையே மட்டும் நடைபெறும் ஆட்டங்களாகும். ஒலிம்பிக் போட்டியில் குழுக்களுக்கிடையே மட்டுமல்லாது தனிமனிதருக்கிடையே பல்வேறு வகையான விளையாட்டுக்களும் நடைபெறும் ஒரு போட்டியாகும். 1996ம் ஆண்டு ஜ"லை மாதம் 19ம் திகதி அமெரிக்க நகரமான அட்லாண்டாவில் ஆரம்பமாகும் போட்டியை இரண்டு மில்லியன் மக்கள் நேரிலும் மூன்று மில்லியன் மக்கள் தோலைக்காட்சியிலும் பார்க்க இருப்பதாக அறியப்படுகிறது. ஏறக்குறைய ஒன்றேமுக்கால் பில்லியன் டொலர்கள் செலவு செய்யப்படும் இப்போட்டியில் 197 நாடுகளைச் சேர்ந்த 11,000 விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

## வாசு

1896ம் ஆண்டு கிறீஸ் நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரில் முதலாவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. இதற்கு கிரேக்க வர்த்தகரான ஜோர்ஜியஸ் என்பவர் தான் தன் செலவிலேயே ஒலிம்பிக் ஸ்டேடியத்தை உருவாக்கி எடுத்தார். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டியை யுத்தம் காரணமாக 1916, 1940, 1944ம் ஆண்டுகளில் நடைபெறவில்லை. ஒலிம்பிக்கின் வயது நூறு. ஆனால் இம்முறை நடைபெறுவதோ 23ஆவது ஒலிம்பிக் போட்டி. இப்போட்டி நடைபெற்ற காலத்தையும், இடத்தையும் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

| ஆண்டு | நகரம் | நாடு |
|---|---|---|
| 1896 | ஏதென்ஸ் | கிறீஸ் |
| 1900 | பாரீஸ் | பிரான்ஸ் |
| 1904 | சென்லூயிஸ் | அமெரிக்கா |
| 1908 | லண்டன் | இங்கிலாந்து |
| 1912 | ஸ்ரொக்கம் | சுவீடன் |
| 1920 | அன்றவேப் | பெல்ஜியம் |
| 1924 | பாரிஸ் | பிரான்ஸ் |
| 1928 | அம்ஸ்றடாம் | ஒல்லாந்து |
| 1932 | லஸ்சஞ்சலிஸ் | அமெரிக்கா |
| 1936 | பேர்லின் | ஜேர்மனி |
| 1948 | லண்டன் | இங்கிலாந்து |
| 1952 | ஹெல்சிக்லி | பின்லாந்து |
| 1956 | மெல்பேர்ன் | அவுஸ்திரேலியா |
| 1960 | ரோம் | இத்தாலி |
| 1964 | டோக்கியோ | ஜப்பான் |
| 1968 | மெக்சிகோநகரம் | மெக்சிகோ |
| 1972 | மியூனிக் | ஜேர்மனி |
| 1976 | மொன்றியல் | கனடா |
| 1980 | மொஸ்கோ | ரஷ்யா |
| 1984 | லஸ்சஞ்சலிஸ் | அமெரிக்கா |
| 1988 | சியோல் | தென்கொரியா |
| 1992 | பார்சலோனா | ஸ்பெயின் |

இதுவரை நடைபெற்ற 22 போட்களில் லண்டன், பாரீஸ், லாஸ்ஏஞ்சல்ஸ் ஆகிய நகரங்களில் தலா இருமுறை நடை பெற்றுள்ளன. இவ்வாண்டுக்கான போட்டியுடன் நான்கு முறை ஒலிம்பிக்கை நடத்திய நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெறுகிறது. ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியா கிராமத்திலிருந்து தீபம் ஏற்றப்பட்டு (சூரியகதிர்) சங்கிலி ஓட்டக்காரர்கள் மூலம் கிரேக்கத்தை வலம் வந்த பின்னர் ஏப்ரல் மாதம் 7ம் திகதி விமானம் மூலம் லாஸ் ஏஞ்சல்ஸ் கொண்டுவரப்பட்டது. இப்பொழுது அமெரிக்க நகரங்கள் ஊடாக ஏறக்குறைய 25 கிலோமீற்றர் தூரத்திற்கு ஓட்டக்காரர்களால் கைமாற்றப்பட்டு தீபம் அட்லாண்டா நோக்கி வருகிறது. இதற்கு மட்டும் செலவு 20 மில்லியன் டொலர்கள்.

1972ம் ஆண்டு மியூனிக்கில் நடைபெற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியை எவருமே மறக்க மாட்டார்கள். Black செப்டெம்பர் என அழைக்கப்படும் அரபுக்குழு 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைக் கடத்திச் சென்று கொலை செய்தது. இது ஒலிம்பிக் வரலாற்றில் ஏற்பட்ட கறைபடிந்த சம்பவமாகும். விளையாட்டு மைதானத்தை சில விமர்சனத்தோடு பார்க்கத் தொடங்கியதால் அட்லாண்டா நகரில் 1500 பொலிஸார், 600 பொலிஸ் அதிகாரிகள், 5000 பாதுகாப்பு உத்தியோகத்தவர் கடமையில் ஈடுபடுவார்கள். இதைவிட போட்டி நடைபெறும் ஒலிம்பிக் கிராமங்களில் 14,000 பேர் பாதுகாப்பு கடமை புரிவர்.

1960ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் எத்தியோப்பியாவைச் சேர்ந்த பிக்கில்லா என்ற மரதனோட்ட வீரர் தனது நாட்டின் வறுமை நிலையை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் பாதணி இன்றி ஓடியது மட்டுமல்லாது, அம்முறை உலகசாதனையை ஏற்படுத்தினார். மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக், நீச்சல் போன்ற பலவகையான போட்டிகள் நடைபெற்றாலும் உலகின் பெரும் ரசிகர்களைக் கவரும் நிகழ்ச்சி ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியாகும். பத்து செக்கனுக்குள் நடக்கும் இப்போட்டிதான் உலகிலேயே அதிவேக மனிதனை நிர்ணயிக்கும் போட்டியாக இருக்கிறது. அமெரிக்க வீரர்களான டெனிஸ் மிற்செல், லீரோ பியூரல், ஸம்பியாவைச் சேர்ந்த பிராய் பிரட்றிக்ஸ் உலகச் சாம்பியன் போட்டியில் முறையே தங்கம், வெள்ளி ஆகிய பதக்கங்களைப் பெற்ற கனடிய வீரர்களான டொனவன் பெயிலி, சூரின், இங்கிலாந்தைச் சேர்ந்த ஒலிம்பிக் சாம்பியன் கிறிஸ்ரி ஆகியோரிடையே பலத்த போட்டி இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல், 4x100 அஞ்சலோட்டம் என்ற நிகழ்ச்சிகளில் கலந்து இதுவரை 8 தங்கப்பதக்கங்களைச் சுவீகரித்த கார்ல் லூயிஸ் இம்முறை நீளம் பாய்தலுக்கு மட்டுமே தெரிவாகியுள்ளார். இதன் மூலம் தொடர்ந்து ஐந்து ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் பெருமையைப் பெறுகின்றார். இவர் அமெரிக்க அஞ்சலோட்ட குழுவிற்கு உதிரி வீரராக இருப்பாரென்றால் அக்குழுவின் பலம் எப்படிப்பட்டதென்பதை வாசகர் அறிந்து கொள்ளலாம்.

விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்து கைதட்டுவதோடு நின்று விடாமல் அதிலேயுள்ள பிரயாசை, சகிப்புத்தன்மை, தோல்வியைத் தாங்கும் மனப்பாங்கு ஆகியவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தால் விளையாட்டுக்கும் நல்லது, சமூக மேம்பாட்டிற்கும் நல்லது.

*****

## சிதறிய செய்திகள்

* இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 2வது கிரிக்கட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இந்திய வீரர் சஞ்சீவ் கங்கூலி தான் விளையாடிய முதல் டெஸ்டிலேயே சதம் போட்ட பெருமையைப் பெற்றார். மற்றொரு புதியவரான ராகுல் ராவிட் ஐந்து ஓட்டங்களால் அந்த பெருமையைத் தவற விட்டார்.

* 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்க வீரர் மைக்கல் ஜோன்சன் 19.66 செக்கனில் ஓடி புதிய உலக சாதனையை மேற்கொண்டார்.

* ஐரோப்பிய வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்தைச் சேர்ந்த சர்வதேச கிரிக்கட் வீரர் ஒருவர் டிக்கி பேட் டெஸ்ட் ஆட்டங்களுக்கு மத்தியஸ்தம் புரிவதிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். மிகவும் மரியாதைக்குரியவரான இவர் 66 டெஸ்ட் பந்தயங்களுக்கு நடுவராக கடமையாற்றியுள்ளார்.

* அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யவுள்ள மேற்கிந்திய கிரிக்கட் கோஷ்டியின் புதிய முகாமையாளராக கிளைவ் லோயிட்டும், புதிய பயிற்றுனராக மல்கம் மார்சலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# YARLTON MARKET

9 CLINTWOOD GATE #4 & 5A
On Victoria Park Ave

Photocopying
& Fax Services

Tel/Fax: (416) 445-5352
Tel: (416) 445-5763

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



## யாழ்ரன் மார்க்கற்



ஐந்தாவதாண்டில்.....

*புதுப் பொலிவுடன்*
*புதிய சுவையுடன்*




## உங்கள் போர்ட்டலோ!

போர்ட்டலோ...
சுவைக்க, தாகம் தீர்க்க,
பயணத்துக்குத் துணை கொடுக்க,
நான்கு காலத்துக்கும்
உற்ற நண்பன்!

70 Weybright Court, # 6, Scarborough, ON.
தொலைபேசி: (416) 293-6555




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES
&
BST INSURANCE BROKERS
சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை



A.VELUPPILLAI (Vel)
(Life Consultant & Insurance Broker)
காப்புறுதி ஆலோசகர்

கனடாவில் 11 வருட காப்புறுதி அனுபவம் சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

ELEVEN CONTINUOUS YEARS IN CANADIAN INSURANCE INDUSTRY

Life Section - Under International Insurance
Property Section- Under BST Insurance

*ஆயுள்காப்புறுதி
*வீடு
*வாகனம்
*வியாபார நிலையங்கள்
*சுகாதாரம்
*கல்வி

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.

அழையுங்கள்:-
Tel: (416) 499-9596
Fax: (416) 499-9382

2190 Warden Ave., Suite. 203,
Scarborough, ON. M1T 1V6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவதாண்டு நிறைவு விழா

[illegible]வின்

# பூ மாலைப்பொழுது

ஆண்டுமலர் வெளியீடு

நிலா குகதாசனின்
'இன்னொரு நாளில் உயிர்ப்பேன்'
கவிதைத் தொகுதி வெளியீடு

கலை நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 10ஆம் திகதி சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு ஆரம்பம்

தொடர்புகளுக்கு (416) 425-2884

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org